வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 06.04.2024 சனிக்கிழமை இதழ் : 97 பக்கங்கள் : 12

# சஜித் தலைமையிலான புதிய கூட்டணி ஆரம்பம்!

## பீரிஸ் அணியினர் மட்டுமே ஒப்பம் மனோ, ஹக்கீம், ரிஷாத் மௌனம்



கொழும்பு, ஏப்ரல் 06

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் நேற்றையதினம் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ. எல். பீரிஸ் தலைமையிலான டலஸ் அழகப்பெருமவின் சுதந்திர மக்கள் சபையைச் சேர்ந்த 6 பேர் இணைந்தனர். 11



## வலி.வடக்கில் காணி சுவீகரிக்க மக்கள் நேற்றும் கடும் எதிர்ப்பு!

அளவீட்டுப் பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 06

கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள காணிகளை நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக சுவீகரிப்பதற்கான அளவீட்டுப்பணி நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் மக்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. 11

## மாவீரருக்கு அஞ்சலி செய்தால் இனி கடுமையான நடவடிக்கை!

பொலிஸ்மா அதிபர் நீதிமன்றத்தில் உத்தரவாதம்

கொழும்பு, ஏப். 06

போரில் மரணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூர்ந்து வடக்கு கிழக்கில் நடத்தப்படும் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக அதிகபட்சமாக சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் நேற்று முன் தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தார்.

இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான ஆனந்த ஜயமன்னவினால், மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக சட்டத்தை 11

## தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது!

கொழும்பு, ஏப். 06

இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிர்வாக தெரிவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. தமிழ் அரசு கட்சியின் மனு மீதான ஆட்சேபனைகளுக்காகவே வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிர்வாக தெரிவு, தலைவர் தெரிவுக்கு எதிராக,திருகோணமலை மாவட்ட நீதிமன்றத் தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை உடனடியாக முடிவுக்கு கொண்டுவருவதற்காக வழக்கின் பிரதிவாதிகளாக 11

## எதிர்பார்த்தது நடந்துவிட்டது

சட்டத்தரணி தவராசா

திருமலை, ஏப். 06

“நாம் எது நடக்கும் என்று எதிர்பார்த்தோமோ, துரதிர்ஷ்ட வசமாக அதுவே நடந்து விட்டது. அது கவலைக்குரியது.” - இவ்வாறு 11





## சிமெந்து ஆலை நிறுவும் ஆய்வுக்கு சென்ற டக்ளஸை திருப்பி அனுப்பினர் மக்கள்!

பொன்னாவெளியில் அமைச்சருக்கு எதிர்ப்பு

கிளிநொச்சி, ஏப். 06

பொன்னாவெளி சிமெந்து தொழிற்சாலையை நிறுவும் ஆய்வுக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்களின் எதிர்ப் பால் திரும்பினார். குறித்த சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றது.

பொன்னாவெளி சிமெந்து ஆலை நிறுவும் ஆய்வுக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் 11

## குச்சவெளி பிச்சமல் விகாரைக்கு 50 இலட்சம் ஒதுக்கினார் ஆளுநர்

திருகோணமலை, ஏப். 06

குச்சவெளி பிச்சமல் விகாரைக்கு 50 இலட்சம் ரூபாயை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒதுக்கியுள்ளார்.

விகாரைக்கு சென்ற கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பௌத்த மதகுருவிடம் ஆசிர்வாதம் பெற்றார். இதைத் தொடர்ந்து, விகாரை புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்கு 15 இலட்சம் ரூபாய் நிதியும், தொல்பொருள் அருங்காட்சியகத்தை ஆரம்பிப்பதற்கு 35 இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளால் பராமரிக்கப்படாத விகாரையை சுற்றியுள்ள கடற்கரையை ஆய்வு செய்து, 24 மணிநேரத்துக்குள் கடற்கரையை சுத்தம் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



## அரசியல் நலன்களுக்காக ஆய்வுகளை நிறுத்தமுடியாது

அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கிளிநொச்சி, ஏப். 06

மக்களுக்கு நன்மை ஏற்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் உண்மைகளை அறிவதற்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொன்னாவெளி பிரதேசத்தில் சிமெந்து தொழிற்சாலையை அமைப்பதற்கான 11

## ஒரே நாளில் 2 தேர்தல்கள் நடத்துவது சாத்தியமில்லை

சுட்டிக்காட்டுகிறது ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 06

“ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவது சாத்தியமில்லை” என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரியொருவர் கருத்து தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் தேர்தல் நடத்தப்படுகின்ற 11

## நாமல் களமிறங்கினால் கட்சிக்குள் பிளவு வரும்!

சுட்டிக்காட்டுகிறார் பிரசன்ன

கொழும்பு, ஏப். 06

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கினால் பொதுஜன பெரமுன கட்சிக்குள் பிளவு ஏற்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

இந்த ஊர்க்குருவி பத்திரிகையாள ராக வாழ்க்கையைத் தொடங்கிய ஆரம்ப காலம் அது. தந்தை செல்வா தனது கடைசிக்காலத்தில் கலந்து கொண்ட ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியமை இப்போதும் ஞாபகத்தில் இருக்கின்றது.

அதனை தந்தைதான் சொன்னாரா அல்லது அவரது தளபதியான அமிர்த லிங்கமே சொன்னாரா என்பது தெரிய வில்லை. ஏனெனில் அந்தக் காலத்தில் அவர் பேசுவதை ஒலிவாங்கி கூட வாங்கிக்கொள்ளாது. அதனால் அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டு அமிர்தலிங்கமே ஒலிவாங்கியில் பேசு வார்.

தந்தை சொல்கிறார் என்று அமிர் கூறிய வார்த்தை இதுதான்:

“என்னுடைய காலத்தில் தமிழ் மக் களின் உரிமைகளைப் பெற்றுவிட லாம் என்று நம்பியிருந்தேன். அது முடியவில்லை. இப்போது நமது உரிமைப் போராட்டத்தை அமிர்த லிங்கத்திடம் ஒப்படைத்திருக்கிறேன். அவர் காலத்தில் தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றேன். அதுவும் சாத்தியமாகவில்லை என்றால், அவர் தனது அடுத்த சந்ததியிடம் போராட் டத்தை கையளிப்பார். அதாவது நாம் நமது உரிமைப்போராட்டத்தை போராட்டமாக என்றாலும் தொடர்ந்து அடுத்த அடுத்த சந்ததி களிடம் கொடுக்கவேண்டும். அப்ப டிக் கொடுக்கவில்லை என்றால், இந்த நாட்டில் தமிழ் இனம் வாழ்ந்தது என்ற அடையாளமே இல்லாமல் போய்விடும்”.

இப்படித்தான் அன்று தந்தை செல்வா கூறினார். அதாவது. நமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வில்லை என்றாலும் பிரச்னையைப் பிரச்னையாகவே வைத்திருக்க வேண் டும். இல்லையெனில் இனமே அழிந்துவிடும் என்றார் தந்தை செல்வா.

தந்தை செல்வாவின் கருத்தை இப் போது நமது அரசியல் தலைவர்கள் என்போர் நினைவில் வைத்திருக்கின் றனரா என்பது தெரியவில்லை. ஆனால் அவர்கள் எல்லோருமே அடுத்த தேர்தலில் தாம் எப்படி வெற்றிபெறலாம் என்பதில் அக்கறை யோடு இருக்கின்றனர். தமிழ் மக் களின் அரசியல் போராட்டம் என்பது இன்று எந்தளவில் இருக்கின்றது என்பதை இங்கே எழுதித்தான் நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதல்ல. ஆனால், நமது மக்களின் அரசியல் எதிர்பார்ப்பை, திரட்சியாக உலகுக்கு சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கவிருக்கின்றது. நடக்கவிருக் கும் ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்பை சொல்கின்ற ஒரு கருத்துக்கணிப்பாக - அரச செலவிலேயே நடத்திக்காட்ட ஒரு சந்தர்ப்பம் நடக்கு கிடைக்க விருக்கின்றது.

அந்த தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப் பட்டதுமே, அது ரணிலை வெல்ல வைப்பதற்கான முயற்சி என்றார்கள் சிலர். இது பதின்மூன்றை வலியுறுத்து வதற்கான சதி என்றார்கள் சிலர். இன் னும் ஒருவர் அநுரவை தோற் கடிப்பதற்கான முயற்சி என்று “படினக்கதை” கதைத்தார். இவை எல்லாம் எதிர்பார்க்கப்பட்டவை தான்.

விடுதலைப் புலிகள் இரண்டாயி ரத்து ஐந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்கக் கோரிய போதே அவர்கள் மகிந்தவிடம் பணத்தை பெற்றுக்கொண்டு ரணி லுக்கு கிடைக்கவிருக்கும் வாக்குகளை அவருக்கு கிடைக்கவிடாமல் செய்து மறைமுகமாக மகிந்தவுக்கு உதவுகி றார்கள் என்றும் கூறப்பட்டது.

அந்த தேர்தலில் மகிந்த ஒரு லட் சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதும், வடக்கில் இரண்டு லட்சம் வாக்குகள் ரணிலுக்கு கிடைப்பது கிடைக்காமல்விட்டதும் அவர்களின் கூற்றுக்கு வலுசேர்ப்பதாக அமைந் தது.

மகிந்தவிடம் பணம் பெறவெண் டும் என்றால், அதாவது புலிகளுக்கு பணம் தேவை என்றால், இப்படியெல் லாம் “டீல்” போட்டுத்தான் வாங்கவேண்டும் என்பதல்ல என்பது தெரிந்தவர்களுக்கு தெரியும்.

இப்போது நாம் சொல்ல வருவது அது அல்ல. ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் என்ற யோச னையை முதல் முதலில் இந்தப் பத்தி யிலேயே பல மாதங்களுக்கு முன்னரே முன்வைத்திருந்தோம். அதன் பின்னர், “மக்கள் மனு” வடக்கு கிழக்கு சிவில் சமூகம் அதனை பேசுபொருளாக்கி யதுடன், அது தொடர்பாக யாழ்ப்பா ணத்தில் கருத்தரங்கு ஒன்றையும் ஏற் பாடு செய்திருந்ததுடன், இன்று அதே போன்ற ஒரு கருத்தரங்கை மட்டக் களப்பிலும் ஏற்பாடு செய்திருக்கின் றது.

இடையே இந்த சிவில் அமைப்பு இதனை ஆரம்பித்ததும், அதில் இடம்பெற்றுள்ள சிலர் பதின்மூன் றுக்கு ஆதரவானவர்கள் என்பதால், அது பதின்மூன்றை வலியுறுத்துவதற் கான முயற்சி என்று சிலர் சேறுபூச முன்றனர். அதாவது ஜனாதிபதி தேர்த லில் போட்டியிடும் வேட்பாளர்களை பதின்மூன்றை ஏற்றுக்கொள்வதற்காக இதனை பயன்படுத்துகிறார்கள் என்ற னர். அதனால்தானோ என்னவோ, அந்த சிவில் சமூகத்தினர் தொடர்ச்சி யாக கொழும்பில் ஜனாதிபதி தேர்த லில் போட்டியிடவுள்ள கட்சிகளிடம் பதின்மூன்றை அமுல்படுத்துவோம் என்ற உறுதிமொழியை அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெறச் செய்ய முயன்று வருகின்றனர்.

அவ்வாறு வேட்பாளர்கள் தமது விஞ்ஞாபனத்தில் பதின்மூன்றை அமுல்படுத்துவோம் என்று உறுதி அளித்துவிட்டால், தமிழ் பொது வேட்பாளர் அந்த கட்சிகளுடன் பேசுவதற்கு விசயமே இருக்காது. அதற்காகத்தான் அதனைப் பயன் படுத்தப்போகிறார்கள் என்ற கோஷம் இதன்மூலம் செல்லாக்காசாகிவிடும்.

ஏற்கனவே அந்த மக்கள் மனு குழுவினரிடம் ஐ.தே.கவும், ஐ.ம.சக்தி யும் மாத்திரமல்ல, அவர்களோடு இணையவிருக்கின்ற தமிழ் முற் போக்கு முன்னணி, பாட்டாலி சம்பிக்கவின் கட்சியும் கூட பதின் மூன்றுக்கு ஆதரவான தமது முடிவை அறிவித்துவிட்டன.

எனவே இந்த தமிழ் பொது வேட் பாளர் என்பது பதின்மூன்றில் நமது கோரிக்கையை முடக்குவதற்கான முயற்சி என்ற வாதம் இப்போது அடிபட்டுப்போய்விட்டது.

பொதுவேட்பாளர் என்பது தந்தை செல்வா சொன்னதுபோல நமது உரிமைப் போராட்டத்தை உயிர்ப்பு டன் வைத்திருப்பதற்கான முயற்சி என்பதை “மக்கள் மனு” இப்போது தெளிவுபடுத்தியிருக்கின்றது.

- ஊர்க்குருவி.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 75,000 பேர் 3 மாதங்களில் வெளியேறினர்!

கொழும்பு, ஏப். 06

2024ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 74 ஆயிரத்து 499 இலங் கையர்கள் தொழில் நிமித்தம் வெளி நாடுகளுக்கு சென்றுள்ளனர் என்ற இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு வேலை பெற்று சென்றவர்கள் தொடர்பில் பணியகம் மேலும் கூறியதாவது :

வேலைவாய்ப்பு பெற்று வெளிநாடு களுக்கு சென்ற 74 ஆயிரத்து 499 இலங்கையர்களில் 46 வீதமானோர் பெண்களாவர்.

கடந்த 2023இல் இதே காலகட்டத் தில் 76 ஆயிரத்து 025 இலங்கை பணி யாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்ற னர். அந்த எண்ணிக்கையோடு ஒப்பிடு கையில், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் வெளிநாடுகளுக்கு சென்ற வர்களின் எண்ணிக்கையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கையர்கள் பெரும்பாலும் தென்கொரியா, இஸ்ரேல், ஜப்பான் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு பெற விரும்புகின்றனர்.

அதனடிப்படையில், 2024ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 17 ஆயிரத்து 793 பேர் குவைத்துக்கும், 2 ஆயிரத்து 374 பேர் தென் கொரியாவுக் கும், 2 ஆயிரத்து 114 பேர் இஸ்ரேலுக் கும், ஆயிரத்து 899 பேர் ருமேனியா வுக்கும், ஆயிரத்து 947 பேர் ஜப்பா னுக்கும் சென்றுள்ளனர்.

அத்துடன், இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் 963.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர் என குறிப்பிட்டுள்ளது.

மத்திய வங்கியின் தரவுகளின் பிரகாரம், வெளிநாடுகளில் பணியாற் றும் இலங்கை தொழிலாளர்கள் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் அதிக அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

அத்துடன், ஆடை உற்பத்தித்துறை மூலம் 803.4 மில்லியன் டொலர், சுற்று லாத்துறை மூலம் 687.5 மில்லியன் டொலர், தேயிலை உற்பத்தித்துறை மூலம் 229.9 மில்லியன் டொலர், பெற் றோலியப் பொருட்கள் ஏற்றுமதியில் 177.3 மில்லியன் டொலர், இறப்பர் தயாரிப்பு ஏற்றுமதியில் 166.4 மில்லி யன் டொலர், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஏற்றுமதியில் 102 மில்லியன் டொலர் என அந்நிய செலாவணி வருவாய்களும் சிறந்த முறையில் பெறப்பட்டுள்ளதாக மத்திய வங்கித் தரவுகளினூடாக தெரியவருகிறது. (ஐ)

# மக்களுக்கு நன்மைகள் கிடைப்பதற்கு அரச அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும்!

## ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர்

கொழும்பு, ஏப். 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் எண்ணக்கருவுக்கு அமைய ஆரம் பிக்கப்பட்ட அஸ்வெசும, உறுமய, மலைநாட்டுத் தசாப்தம் உள்ளிட்ட வேலைத் திட்டங்களின் பலன்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க அரசி யல்வாதிகளைப் போன்று அரசாங்க அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டி யது அவசியம் என்று ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப் பட்ட உறுமய, அஸ்வெசும மற்றும் மலைநாட்டுத் தசாப்தம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து அரசியல் செயல் பாட்டாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினரைத் தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் நடை பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தொழிற்சங்கள் தொடர் பாடல் பிரிவினால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, எதிர்வரும் நாட்களில் இந்தச் சந்திப்பு களை நாடளாவிய ரீதியில் நடத்துவ தற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்போது, அரசியல் நோக்கங் களைப் புறந்தள்ளிவிட்டு மக்களுக்கான மேற்படி வேலைத்திட்டங்களை சாத்தி யப்படுத்த முன்வருமாறு அழைப்பு விடுத்த சமன் ரத்னப்பிரிய, மக்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்த இந்த வேலைத்திட்டம் உதவும் என்றும் கூறினார். (ஐ)

# சுதந்திர கட்சியின் கோப்புகள் மாயம்

கொழும்பு, ஏப். 06

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலை மையகத்திலிருந்து பல முக்கிய கோப்பு கள் காணாமல் போயுள்ளன என்று கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால மருதானை பொலி ஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# நடிகை தமிதாவுக்கும் கணவருக்கும் மறியல்!

கொழும்பு, ஏப். 06

நடிகை தமிதா அபேரத்னவும் அவரது கணவரும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் அவர்கள் நேற்று முற்படுத்தப்பட்ட போது விளக்கமறியல் உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

நடிகை தமிதா அபேரத்னவும் அவரது கணவரும் நேற்று முன்தினம் குற்றவியல் விசாரணை திணைக்களத்தி னரால் கைது செய்யப்பட்டனர்.

கொரியாவில் வேலை பெற்றுத் தருவதாகத் தெரிவித்து சுமார் 30 இலட்சம் ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் இரு வரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# விபத்தால் அதிர்ச்சி; மூதாட்டி உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஏப். 06

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் மின்கம்பத்துடன் மோதி இடம்பெற்ற விபத்தால் அதிர்ச்சியில் மூதாட்டி ஒரு வர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு வாகரை - திருமலை வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் கண்டியை சேர்ந்த நாகபூசனி வயது- 74 என்பவரே உயிரிழந்தார்.

திருகோணமலையில் இருந்து வாகரை வீதி ஊடாக கண்டியை நோக் கிச் சென்ற சிறிய ரக கார் மின் கம்பத்து டன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

வாகரை இராணுவ முகாமுக்கு அண்மையாக இந்த விபத்தில் இடம் பெற்றது. விபத்தால் அதிர்ச்சியடைந்த பெண் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந் தார். குறித்த மூதாட்டி தனது பிள்ளை களுடன் சுற்றுலா வந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
06.04.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெளியாருக்காக காத்திருப்பதற்கு அப்பால்...!

யுத்தத்துக்குப் பின்னரான காலம் முழுவதும் வெளியாருக்கான காத்திருப்புடன்தான் தமிழ்த் தேசியத்தின் பெயரிலான அரசியல் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், இந்த வெளியாரின் தலையீடுகளால் எதிர்பார்த்த எந்தவொரு விடயமும் நடைபெறவில்லை. இதுபற்றி பேசும்போது - உடனடியாக ஒரு கேள்வி குறுக்கிடலாம் - அவ்வாறாயின், சர்வதேச அழுத்தங்களை நோக்கி செயல்படக்கூடாதா? அந்த அழுத்தங்களை நோக்கி செயல்படத்தான் வேண்டும் - ஆனால், அவற்றை மட்டும் சர்வலோக நிவாரணியாக எண்ணிக் கொண்டு நாங்கள் செய்ய வேண்டிய எதனையும் செய்யாமல் இருப்பதுதான் தவறானது.

யுத்தத்துக்குப் பின்னரான காலம் முழுவதும் தமிழ் மக்களை ஒரு தரப்பாக முன்வைக்கக்கூடிய விடயங்கள் எவற்றிலும் தமிழர்களால் வெற்றிபெற முடியவில்லை. இதன் பொருள் என்ன? வெளியாரின் அழுத்தங்கள் தாக்கம்மிக்கதாக இருந்திருந்தால், சிறீ லங்கா அரசு ஓரளவாவது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் முன்னோக்கி சென்றல்லவா இருக்க முடியும். அவ்வாறு இடம்பெறவில்லையே? ஏன்? இந்தக் கேள்வியை கேட்காமல் எவ்வாறு தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் முன்னோக்கி பயணிக்க முடியும்?

அரசியல் விடயங்களை முன்னெடுக்கும்போது மிகவும் அடிப்படையானது கடந்த கால அனுபவங்களை தொகுத்துக் கொள்வது முக்கியம். அவ்வாறு தொகுத்து நோக்கும்போதுதான் நாம் நடந்து வந்த பாதை சரியானதா அல்லது தவறானதா என்பது நமக்குத் தெரியவரும். வெளியாருக்காகக் காத்திருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதுதான் இதுவரையான படிப்பினை. ஏனெனில், நாம் எம்மை தேவையானவர்களாக நிரூபிக்காத வரையில் எவரும் எங்களை நோக்கி வரப்போவதில்லை. அவர்கள் தங்களின் உலகளாவிய கரிசனை என்னும் அடிப்படையில் சில விடயங்களை அவ்வப்போது கூறி விட்டுச் செல்வார்கள். இதுவரையில் அதுதான் நடந்தது.

எங்களை எவ்வாறு தேவையுள்ளவர்களாக நிரூபிப்பது? முதலில் நாங்கள் ஓரணியாக இல்லை. தேர்தல் அரசியலை காரணம்காட்டி பிளவுற்றிருக்கின்றோம். இதன் காரணமாகத்தான் அனைவருமே ஒற்றுமையாக வாருங்கள் என்று எங்களைப் பார்த்து வெளியார் கூறுகின்றனர். அவர்கள் அவ்வாறு கூறுவதற்கான இடத்தை நாம் விட்டு வைக்கக் கூடாது.

இரண்டாவது, இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் இலகுவாகக் கையாள முடியாத மக்கள் கூட்டமென்னும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும். இந்த இரண்டையும் கையாள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்போது, அதனை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அந்த வாய்ப்பு இப்போது கிடைத்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலை தந்திரோபாயமாக நாம் பயன்படுத்திக் கொள்ளும் தீர்மானத்தில் உறுதி பூண்டால் நமது பக்கத்திலுள்ள அனைத்து சிக்கல்களையும் ஒரு நகர்வில் போக்கிக்கொள்ள முடியும். தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒன்றுபடுவதன் ஊடாக நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்னும் கேள்விக்கும் முற்றுப்புள்ளியிடலாம் - அதேவேளை தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் ஒரு தேவையுள்ள மக்கள் கூட்டம் என்பதையும் நிரூபிக்க முடியும். இவ்வாறானதொரு சூழலில்தான் இலங்கைத் தீவின் ஜனாதிபதித் தேர்தலில் அக்கறை காண்பிக்கும் வெளித் தரப்புகள் அனைத்தும் நம்மை நோக்கி வரும் - வரவைக்க முடியும்.

# ஊர்காவற்றுறை வன்முறை கும்பலுக்கு பொலிஸ் உத்தியோகத்தர் உடந்தை!

## விசாரிக்குமாறு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 06

வன்முறை கும்பல் ஒன்றிற்கு ஆதரவாக செயல்பட்ட குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மையில், ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் சில வீடுகளுக்குள் வன்முறை கும்பல் புகுந்து தாக்கி விட்டு தப்பிச் சென்றது. மறுநாளும் அந்தக் குழு தாக்குதல் நடத்தச் சென்ற நிலையில் அவர்களில் நால்வரை ஊரவர்கள் மடக்கிப் பிடித்தனர்.

அவர்களிடம் ஊரவர்கள் நடத்திய விசாரணையில் பொலிஸ் உத்தியோகத்தர் அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதாகக் கூறியுள்ளனர்.

பிடிபட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் அவர்களை மன்றில் முன்னிலைப்படுத்தினர்.

பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பிலும் நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து வன்முறைக் குழுவுக்கு உதவிய பொலிஸ் அதிகாரியை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# மருத்துவமனையில் சிறுமியை வன்புணர்ந்த சந்தேகநபர் கைது

கொழும்பு, ஏப். 06

கொழும்பு - கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த 10 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று காலி பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் பாதிக்கப்பட்ட சிறுமி அனுமதிக்கப்பட்டிருந்த அதே விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள மற்றுமொரு சிறுமியின் தந்தையாவார். சிறுமியின் தாய் உறங்கிக் கொண்டிருந்த நிலையில், சந்தேக நபர் இந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி இது தொடர்பில் தனது தாயிடம் தெரிவித்ததையடுத்து மருத்துவமனை அதிகாரிகளால் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 39 வயதுடைய சந்தேக நபர் காலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# இந்திய மருந்தால் பார்வை இழந்தவர் கெஹலியவிடம் நட்டஈடு கோரினார்!

கொழும்பு, ஏப். 06

அரசாங்க மருத்துவமனையில் கண்புரை அறுவைச் சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்ட மருந்தால் பார்வையை இழந்தவர் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடமிருந்து 10 கோடி ரூபாயை நட்டஈடாகக் கோரியுள்ளார்.

நுவரெலியா - கந்தபொலவை சேர்ந்த மகரி ராஜரட்ணம் என்ற நபர் சட்டநிறுவனம் ஊடாக நட்டஈட்டை கோரியுள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையின் அதிகாரிகள் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தனக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக நட்டஈட்டை வழங்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ராஜரட்ணம் இழப்பீடு வழங்கப்படாவிட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

2023ம் ஆண்டு மே 5ஆம் திகதி தனது கட்சிக்காரர் நுவரெலியா மருத்துவமனையில் கண்சத்திர சிகிச்சை செய்துகொண்டார். ஆறாம் திகதி அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறினார் மருத்துவமனையில் ப்ரெட்னி சோலோன் அசிடேட்என்ற மருந்தை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கினார்கள் என தெரிவித்துள்ளது.


எனினும் குறிப்பிட்ட கண் மருந்தை பயன்படுத்திய தை தொடர்ந்து தனது கட்சிக்காரர் தலைவலி உட்பட பல பாதிப்புகளை எதிர்கொண்டனர் என சட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற்றன. எனது கட்சிக்காரர் பத்தாம் திகதி மீண்டும் தேசிய கண்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு இடம்பெற்ற மருத்துவபரிசோதனைகள் மூலம் குறிப்பிட்ட கண் மருந்து காரணமாக அவர் பார்வையை இழந்துகொண்டிருப்பது தெரியவந்தது எனவும் குறிப்பிட்டுள்ளது.

அந்த கண்மருந்துகள் தரமற்றவை அந்த மருந்தினை பயன்படுத்தியவர்கள் எண்டோபனைட்டிஸ் நோய் பாதிப்புக்கு உள்ளானர்கள் எனவும் அந்த சட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 06 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 24
நல்ல நேரம் : 07.30 - 08.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரையோதசி




**மேடம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சிறப்பான நாள்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**கன்னி**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**துலாம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும்.

**விருட்சிகம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களால் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். அதிகாரிகள் முக்கியத்தும் தரு வார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். போராடி வெல்லும் நாள்.

# அ. தி. மு. கவுக்கு துரோகம் இழைத்தால் ஓ. பி. எஸ்ஸுக்கு கிடைத்த பரிசே கிட்டும்

## எடப்பாடி பழனிசாமி



ஈரோடு, ஏப். 06

“நம்பிக்கை வாக்கெடுப்பின் போது அ. தி. மு. கவுக்கு எதிராக வாக்களித்தவர்கள் யார் என்பதும் தெரியும். அன்றைய தினமே, எம். ஜி. ஆர்., ஜெயலலிதாவின் ஆன்மா ஒருவருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று எண்ணியது. அந்தத் தண்டனை இன்றைக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. இந்த இயக்கத்துக்கு யார் துரோகம் செய்தாலும், இப்போது ஒருவர் இருக்கிறாரே, அவருக்கு கிடைத்த பரிசுதான் கிடைக்கும். இந்த இயக்கம் தெய்வ சக்தி உள்ள இயக்கம்” என்று ஈரோட்டில் நடந்த பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

“அ. தி. மு. கவை வீழ்த்த, தி. மு. க . தலைவர் எத்தனையோ அவதாரங்களை எடுத்துவிட்டார். தி. மு. க. எடுத்த அத்தனை அவதாரங்களையும் மக்களின் துணையோடு தவிடுபொடியாக்கிய கட்சி அ. தி. மு. க. முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு கட்சியில் எத்தனை பிரச்னைகள் ஏற்பட்டது, என்பதை அனைவரும் அறிவர்.

இந்த இயக்கத்தை அழிக்க இன்றைய முதல்வர் ஸ்டாலின் போட்ட திட்டங்கள் அத்தனையும் மக்களின் துணையோடு தூள் தூளாக்கப்பட்டது - என்றார். (ஐ)

# தி. மு. கவை கேள்வி கேட்டோருக்கு காங்கிரஸின் தேர்தல் அறிக்கை பதில்!

சென்னை, ஏப். 06

“நாம் வலியுறுத்திய வாக்குறுதிகள் அனைத்தையும் உள்ளடக்கி, மாநிலக் கட்சியான தி. மு. கவால் நிறைவேற்ற முடியுமா எனக் கேள்வி எழுப்பியோருக்கான தக்க பதிலாக அமைந்துள்ளது காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள 2024 தேர்தல் அறிக்கை” என்று காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கருத்து தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில், “அடிமை அ. தி. மு. க. அடகு வைத்த, பாசிச பா. ஜ. க. பறித்த தமிழகத்தின் உரிமைகளை மீட்க, இந்தியா கூட்டணிக்கு வாக்களியுங்கள். நாம் வலியுறுத்திய வாக்குறுதிகள் அனைத்தையும் உள்ளடக்கி, மாநிலக் கட்சியான தி. மு. கவால் நிறைவேற்ற முடியுமா எனக் கேள்வி எழுப்பியோருக்கான தக்க பதிலாக அமைந்துள்ளது காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள 2024 தேர்தல் அறிக்கை. அதனால்தான் சொல்கிறோம். இது வெறும் தேர்தல் கூட்டணி அல்ல் கொள்கையால் ஒன்றிய கூட்டணி” என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# “எங்கள் கட்சியின் வெற்றியை தடுப்பதிலேயே அனைவரும் குறி!”

கிருஷ்ணகிரி, ஏப். 06

“எங்கள் கட்சியின் வெற்றியைத் தடுப்பதிலேயே அனைவரும் குறியாக உள்ளனர்” என்று கிருஷ்ணகிரி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வித்யாராணி வீரப்பன் குற்றம்சாட்டியுள்ளார்.

“கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளராகிய எனக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்துள்ளது. இதனை பொறுத்துக்கொள்ள முடியாமல் எதிர்கட்சிகள் பல்வேறு வகையில் எங்கள் கட்சி பொறுப்பாளர்களுக்கும் தொந்தரவு தருகின்றனர்.

வேட்புமனு பரிசீலனையில் போது எங்கள் கட்சியினர் மீது காரை ஏற்றுவது போல் சிலர் வந்தனர். நேற்று கிருஷ்ணகிரி பேருந்து நிலையத்தில் நின்ற எங்கள் கட்சி பொறுப்பாளர்களை சுயேச்சை வேட்பாளர் ஒருவர் மிரட்டியுள்ளார். பிரசாரத்தின்போது எங்கள் வாகனங்கள் பின் தொடர்ந்து கண்காணிக்கும் பணியில் தேர்தல் அலுவலர்கள் ஈடுபடுகின்றனர்.

அலுவலர்களுக்கு எங்கள் பின்வருவதை தவிர வேறு எந்த வேலையும் செய்வதில்லை. போலீஸாரும் எங்கள் மீது வேண்டுமென்றே வழக்கு போடுகின்றனர். எங்கள் கட்சியின் வெற்றியை தடுப்பதிலேயே அனைவரும் குறியாக உள்ளனர் - என்றார். (ஐ)

# நீட் தேர்வு இரத்து என்பது காங்கிரஸின் தேர்தல் நாடகம்

## நாம் தமிழர் சீமான்



சென்னை, ஏப். 06

“நீட் தேர்வை எழுத முடியாமல், தற்கொலை செய்து கொண்ட எத்தனை குழந்தைகளின் வீடுகளில் துக்கம் விசாரித்தது காங்கிரஸ் கட்சி. இவர்கள் ஒன்றைக் கொண்டு வருவார்கள், அதை எதிர்த்தால், விரும்பினால் என்று கூறி பின்வாங்குவார்கள். நாங்கள்தான் நீட் தேர்வை விரும்பவில்லையே. எனவே, இவையெல்லாம் தேர்தல் நாடகம்” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“நீட் தேர்வை கொண்டு வந்தது யார்? காங்கிரஸ் கட்சி. தற்போது தேர்தலில் வாக்கு வாங்குவதற்காக, அவ்வாறு கூறுகின்றனர்.

இத்தனை நாட்களாக காங்கிரஸ் நீட் தெரிவு குறித்து பேசவே இல்லை. நீட் தேர்வு எழுதச் சென்ற மாணவர்களுக்கு வாழ்த்துகள் கூறித்தானே, ராகுல் காந்தி அனுப்பினார். சரி, இந்த நீட் தேர்வை எழுத முடியாமல், தற்கொலை செய்து கொண்ட எத்தனை குழந்தைகளின் வீடுகளில் துக்கம் விசாரித்தது காங்கிரஸ் கட்சி. இவர்கள் ஒன்றைக் கொண்டு வருவார்கள், அதை எதிர்த்தால், விரும்பினால் என்று கூறி பின்வாங்குவார்கள். நாங்கள்தான் நீட் தேர்வை விரும்பவில்லையே. எனவே, இவையெல்லாம் தேர்தல் நாடகம் - என்றார்.

# இலங்கைக்கு தென்கொரியா எப்போதும் துணை நிற்கும்!

## கொரிய பிரதமர் உறுதி

கொழும்பு, ஏப். 06

**இலங்கைக்கு பல புதிய தொழில் வாய்ப்புகளுக்கான வாயில்கள் திறக்கப்படும் என தென்கொரிய பிரதமர் ஹான் டக் சூ தெரிவித்துள்ளார்.**

**தென்கொரியப் பிரதமர் ஹான் டக் சூவுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன் தினம் சியோலில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

விவசாயம், நிர்மாணத்துறை மற்றும் வேறு கைத்தொழில் துறைகளில் தனது நாட்டில் வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டிருக்கும் தொழிற்படைக்கு மேலதிகமாக, சுகாதார சேவைகள் மற்றும் தொழில்முறை சேவைகளுக்கு புதிய வேலைவாய்ப்பு களை வழங்குவது குறித்தும் அவதானம் செலுத்தப்படும் என தென்கொரிய பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

கடந்த கால நிதி நெருக்கடியின் பின்னர் மீண்டும் எழுச்சி பெற்றுள்ள இலங்கைக்கு, தமது நாடு எப்போதும் துணை நிற்கும் என தென்கொரிய பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தேவை, கடற்றொழில் மற்றும் கூட்டு முதலீடு ஆகிய துறைகளில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகளுக்கான காலத்தை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும் தென்கொரிய பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)



# பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்து; இரு யுவதிகள் வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, ஏப். 06

புதுக்குடியிருப்பு பகுதியில் பஸ் ஒன்றும் ,மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய தில் இரு யுவதிகள் காயமடைந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விசுவமடுவில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றும் முல்லைத்தீவில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கிச் சென்ற இரு யுவதிகள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் புதுக்குடியிருப்பு குழந்தையேசு ஆலயத்திற்கு முன்பாகவுள்ள முல்லைத்தீவு பிரதான வீதியில் நேருக்கு நேர் மோதுண்டு விபத்திற்குள்ளாகின.

குறித்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு யுவதிகளும் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த விபத்து சம்பவத்தில் 23,24 வயதுடைய ஒட்டுசுட்டானை சேர்ந்த யுவதிகளே காயமடைந்துள்ளனர். (அ)

# யாழில் நித்திரைக்கு சென்றவர் மயங்கிய நிலையில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ்ப்பாணத்தில் நித்திரையில் மயக்கமுற்றவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த செபமாலை செல்வராசா (வயது 45) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இரவு தூங்கியவர் மறுநாள் காலை 07 மணியாகியும் தூக்கத்தால் எழும்பாததால், வீட்டார் அவரை தொட்டு எழுப்ப முயன்றபோது அவர் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டுள்ளார்.

அதனை அடுத்து வீட்டார் அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# ஜப்பானில் வேலை தருவதாக 20 கோடி ரூபா பண மோசடி!

கொழும்பு, ஏப். 06

ஜப்பான் நாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 20 கோடி ரூபா பண மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மத்திய மாகாண உயர் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் தம்புள்ளை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டார்.

ஜப்பான் மொழிப் பாட ஆசிரியராகத் தன்னை இனங்காட்டிய இவர், ஜப்பான் நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பலரிடம் 5 முதல் 20 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# 810 போலி தங்க காசுகளுடன் தந்தை, தாய், மகன் கைது!

கொழும்பு, ஏப். 06

புதையல் மூலம் கிடைத்த விலைமதிப்பற்ற தங்கக் காசுகள் எனக் கூறி போலி தங்கக் காசுகளை மனம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவருக்கு விற்பனை செய்ய முயன்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை , தாய் மற்றும் மகன் உள்ளிட்ட மூவர் பொலனறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலனறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது சந்தேக நபரான தந்தை தப்பிச் செல்ல முற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலனறுவை பிரதேசத்தைச் சேர்ந்த 47,23,18 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை , தாய் மற்றும் மகனாவர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 810 போலி தங்கக் காசுகள் , தராசு மற்றும் 6 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# பாதாள குழுக்களை சேர்ந்த மூவர் கைது!

கொழும்பு, ஏப். 06

விசேட சுற்றிவளைப்பின போது கைது செய்யப்பட்ட பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு மற்றும் 4 வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களில் ஒருவர் "ராஜ மல்வத்த சாமர" என்பவரின் உதவியாளர் என்பதுடன் இவர் கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதி மட்டக்குளி, அலிவத்த பிரதேசத்தில் நபரொருவரை சுட்டுக் கொல்ல பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சேதவத்தைப் பகுதியில் உள்ள புறாக் கூடு ஒன்றுக்கு அருகில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இரண்டு சந்தேக நபர்களும் பாதாள உலக தலைவர்களும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர்களுமான "மோதரை நிபுண" மற்றும் "ராஜ மல்வத்த சாமர" ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

விசாரணையில் சந்தேக நபர்களின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 வாள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# அநுராதபுரம் சிறையில் இரு தரப்பினர் மோதல்

## மூவர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஏப். 06

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரைப் பார்வையிடச் சென்ற இருவருக்கும் சிறைச்சாலை அதிகாரிகள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையின் கைதியொருவரும் சிறைச்சாலை அதிகாரியொருவரும் பனியன்கடவல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரை பார்வையிடச் சென்ற இரு இளைஞர்கள் அங்கு கடமையிலிருந்த இரு சிறைச்சாலை அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் கைதியைப் பார்வையிடச் சென்றதாகக் கூறப்படும் இந்த இரு இளைஞர்களும் சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# கொழும்பில் பாதுகாப்பு கடமைகளில் புலனாய்வுப் பிரிவின் 100 அதிகாரிகள்

கொழும்பு, ஏப். 06

மேல் மாகாணத்தில் 100 பொலிஸ் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தமது கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு கொழும்பில் பாதுகாப்பு கடமைகளுக்கு மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தமிழ் - சிங்கள புதுவருட காலத்தில் வாகன திருட்டு, தங்க நகை கொள்ளை போன்ற குற்றங்களை தடுப்பதற்கும் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும் மேல்மாகாண புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளை கொழும்பில் பொது கடமைகளில் ஈடுபடுத்துமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# சுதந்திரக் கட்சி வீழ்ச்சிக்கு மைத்திரிபாலவே காரணம்!

## மஹிந்த அமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 06

**சுதந்திரக் கட்சியை பலப்படுத்துவதற்காக கூட்டணி அமைப்பதற்கான சந்தர்ப்பம் பல தடவைகள் கிடைத்த போதிலும் அதனை கட்சியின் தவிசாளர் நிராகரித்திருந்ததாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.**

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரக்கட்சியில் நாம் மீண்டும் எமது பதவி நிலைகளில் நீடிக்கின்றோம். அரசியலமைப்புக்கு முரணாகவே கட்சியில் இருந்து எம்மை நீக்கினர்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கவினால் கட்டியெழுப்பப்பட்ட எமது கட்சிக்குள் ஒரு கட்டத்தில் பலவித முரண்பாடுகள் ஏற்பட்டன.

இதனை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அம்மையார் நீதிமன்றத்தை நாடினார்.

ஏனென்றால் சுதந்திரக்கட்சி இனியும் வீழ்ச்சிப்பாதைக்கு செல்வதை அவர் விரும்பவில்லை.அதன்பிரகாரம் கட்சியின் தவிசாளர் பதவியில் மைத்திரிபால தொடர்ந்தும் நீடிப்பதற்கு இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது-என்றார்.



(அ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 06

இபலோகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியங்குளம் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக இபலோகம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கெலேதிவுல்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபராவார்.

இவர் தனது வீட்டுக்கு அருகில் உள்ள காணியொன்றுக்குச் சென்றிருந்த போது காணியைச் சுற்றியிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இந்த காணியின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் அநுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# திடீர் சுகவீனத்தால் பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 06

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவர் ஒருவர் இன்று அதிகாலை உயிரிழந்தார்.

திடீர் சுகவீனம் காரணமாக அவர் நேற்று அதிகாலை பிலியந்தலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர் ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த வினோஜ் குமார் என தெரியவந்துள்ளது.

சடலம் மீதான பிரேத பரிசோதனை இடம்பெறவுள்ள துடன், பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# 15 வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு, ஏப். 06

இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்து ஒன்லைன் வேலைகளில் ஈடுபட்டு வந்த 15 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பின் புறநகர் பகுதியான தெஹிவளையில் குடிவரவு திணைக்களத்தின் விசேட புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் இவர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் 11 பேர் இந்தியா மற்றும் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. இவர்கள் அனைவரும் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

குறித்த 11 பேரும் காலாவதியான விசாவுடன் இலங்கையில் தங்கியிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தவிர இவர்களில் எஞ்சிய 04 பேர் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து வேலையில் ஈடுபட்டுள்ளவர்களாவர்.

கைது செய்யப்பட்டுள்ள 11 வெளிநாட்டவர்களும் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (அ)

# தென்னையில் வெண் ஈ தாக்கம் யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ்.மாவட்டத்திலும் தென்னை மரங்களில் வெண் ஈயின் தாக்கம் தற்போது அதிகரித்து வரும் நிலையில் அதனை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், வெண் ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடு நேற்று முன்தினம் கோண்டாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலக்கியல் துறை பேராசிரியர் ஆர். ஞானேஸ்வரன், வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறிரங்கன், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் உ.பாலகௌரி, திருநெல்வேலி விவசாய ஆராய்சி நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் ஆர். ராஜேஸ்கண்ணா, தென்னை பயிர்ச் செய்கை சபையின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

# சு.கவின் தலைவர் பதவிக்கு மூவரின் பெயர் பரிந்துரை

கொழும்பு, ஏப். 06

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர்களான நிமல் சிறிபாலடி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எவ்வாறாயினும், சுதந்திரக் கட்சியின் அரசியல் தீர்மானங்களை கட்சியின் மத்திய குழு உள்ளிட்ட கட்சியின் ஏனைய குழுக்களே தீர்மானிக்கும் என கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பதவியில் இருந்து நீக்கப்பட்ட சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் மஹிந்த அமரவீர, தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க மற்றும் பொருளாளர் லசந்த அழகியவண்ண ஆகியோர் மீண்டும் தமது கடமைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில், சுதந்திர கட்சியை கட்டியெழுப்புவதே தமது ஒரே நோக்கம் என தெரிவித்த கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் மஹிந்த அமரவீர கட்சியை விட்டு வெளியேறியவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்கள் மீது நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஏப். 06

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில், கடந்த சில நாட்களாக அராலிப் பிரிவு பொது சுகாதார பரிசோதகர், மூளாய் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர்கள், தங்கள் பிரிவுகளில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது திகதி காலாவதியான உணவு பொருட்கள், பழுதடைந்த உணவு பொருட்கள், உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவகங்கள் என 6 உணவகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் சிக்கிக் கொண்டன.

மேற்படி 6 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களிற்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன் தினம் மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிமன்றம், உணவக உரிமையாளர்களிற்கு 90,000 ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தது.

அத்துடன் ஒருஉணவகமும் சீல்வைத்து மூடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மரக் குற்றிகளை வைத்திருந்த இளைஞர் பொலிஸாரால் கைது

முல்லைத்தீவு, ஏப். 03

சுதந்திரபுரம் மத்தி பகுதியில் பல இலட்சம் பெறுமதியான மரக்குற்றிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் மத்தி பகுதியில் அனுமதிப் பத்திரம் இல்லாமல் 25 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பாலை, முதிரை, வாகை மரக்குற்றிகளை பலகையாக்கி தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, சந்தேக நபரின் சுதந்திரபுரம் மத்தியிலுள்ள பத்து ஏக்கர் காணியினை சுற்றிவளைத்து புதுக்குடியிருப்பு பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது குறித்த காணியில் தென்னோலையால் மறைத்து வைக்கப்பட்டிருந்த மரக் குற்றிகள் மீட்கப்பட்டதுடன், மரம் அறுக்க பாவித்த இயந்திரம் மூன்றும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தில் 29 வயது மதிக்கத்தக்க உடையார் கட்டு மூங்கிலாற்றை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். (அ)

# லொறி-ஓட்டோ விபத்தில் 8 வயது மாணவன் பலி!

கொழும்பு, ஏப். 06

லொறியுடன் ஓட்டோ நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கரவண்டியில் பயணித்த 8 வயது பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார் .

மாத்தறை தங்காலை பிரதான வீதியின் தொடம்பஹல உடதெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோ வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி, பின் இருக்கையில் பயணித்த பெண் மற்றும் அவரது மகன் ஆகியோர் படுகாயமடைந்து தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் .

இதன்போதே குறித்த பாடசாலை மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதுடன் விபத்தில் படுகாயமடைந்த பெண் தங்காலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் , ஓட்டோச் சாரதி மற்றும் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# 220 இலட்சம் மக்களின் பாதுகாவலரே நாம்தான்!

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, ஏப். 06

**"220 இலட்சம் மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் நலன்களைப் பாதுகாக்கும் பாதுகாவலரே நாம் தான்" என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்திக்கும் சுதந்திர மக்கள் கூட்டணிக்கும் இடையில் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டைப் பொருளாதார மற்றும் சமூக அவலங்களில் இருந்து மீட்டெடுக்கும் பயணத்தை இன்று ஆரம்பித்துள்ளோம். மக்களின் ஆணையால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தில் யாரும் தனிப்பட்ட முறையில் சுகபோகங்களை அனுபவிக்க முடியாது.

220 இலட்சம் மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் நலன்களைப் பாதுகாக்கும் பாதுகாவலரே நாம் தான். ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கம் எதிர்காலத்தில் அதிகபட்ச தியாகங்களைச் செய்யும். இலங்கையை உலகில் முதலிடத்திற்கு கொண்டு வரும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

எம்மால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயலும் பொது நலன், பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் மக்களின் முன்னேற்றம் ஆகியவற்றை நோக்கியே அமைந்திருக்கும். இன்னும் மக்கள் மையமாக கொண்டு பல கூட்டணிகள் எதிர்காலத்தில் உருவாகும். இந்த கூட்டணிகளின் பின்னணியில் சலுகைகளோ அல்லது வரப்பிரசாதங்களோ வழங்கப்படவில்லை, நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

சுயநலமின்றி பொது மக்களுக்கு தன்னலமின்றி சேவையாற்றும் உன்னத பொது சேவைக்காக அணி திரள்வோம். இனம், மதம், சாதி, குலம், கட்சி பேதமின்றி நாட்டை முன்னோக்கி கட்டியெழுப்பும் பயணத்தில் 220 இலட்சம் மக்களுக்கும் தலைமைத்துவம் வழங்க நாம் தயார் -என்றார். (அ)

## எம்.ஜி.வீரசேன எம்.பியாக நியமனம்

கொழும்பு, ஏப். 06

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.நந்தசேன காலமானதையடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு எம்.ஜி.வீரசேன நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டது.

2020 பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவின் அநுராதபுரம் மாவட்ட பட்டியலில் எச்.நந்தசேனவுக்கு அடுத்ததாக எம்.ஜி. வீரசேன அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அனுராதபுர போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த எச்.நந்தசேன நேற்று முன்தினம் காலமானார்.

## மோட்டார் சைக்கிள் விபத்து; துணவியில் மூவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஏப். 06

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துணவி பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று மதில் மற்றும் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்த சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டையிலிருந்து நவாலியை பகுதியை நோக்கி ஒரு மோட்டார் சைக்கிளில் மூன்று இளைஞர்கள் பயணித்துள்ளனர்.

துணவியில் உள்ள குளத்துக்கு அருகிலுள்ள வளைவில் மோட்டார் சைக்கிள் திரும்ப முற்பட்டபோது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் அருகிலுள்ள மதிலிலும் பின்னர் மரத்துடனும் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது அதில் பயணித்த தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயிலும் 18 மற்றும் 17 வயதுகளை உடைய மூன்று மாணவர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பருத்தித்துறை, நவாலி மற்றும் நாவற்குழி பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரில் ஒருவர் மட்டுமே தலைக்கவசம் அணிந்திருந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (அ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் 3 நாள் விவாதம்

கொழும்பு, ஏப். 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்வரும் 24, 25 மற்றும் 26 ஆகிய மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அதன்படி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஒத்திவைப்பு வேளை விவாதத்தை எதிர்கட்சிகள் கொண்டு வந்த பிரேரணையின் படி முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற பதில் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சு.க. அரசியல் குழுவைக் கூட்டுக!

### நிமல் சிறிபால டி சில்வா அவசர கோரிக்கை

கொழும்பு, ஏப். 06

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவின் அவசரக் கூட்டத்தை கூட்டுமாறு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கட்சியின் பதில் செயலாளர் துஷ்மந்த மித்ரபாலவுக்கு கடிதம் மூலம் நிமல் சிறிபால டி சில்வா கோரிக்கையை விடுத்துள்ளார்.

மைத்ரிபால சிறிசேன, கட்சித் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளதால், கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 8ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அவசரக் கூட்டத்தை கூட்டுமாறு நிமல் சிறிபால டி சில்வா குறித்த கடிதத்தின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## ஜனவரி மாதம் முதல் இதுவரை 20,365 பேர் டெங்கினால் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 06

ஏனைய வருடங்களை விட இந்த வருடம் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையையும் அதனால் ஏற்படும் இறப்பு வீதமும் குறைந்துள்ளதாக சுகாதார இராஜாங்க அமைச்சர், விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

ஜனவரி முதல் இதுவரை 20,365 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 7289 பேர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர். 2024ஆம் ஆண்டில் 08 டெங்கு மரணங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆண்டுதோறும் பண்டிகைக் காலங்களில் பாதுகாப்பற்ற முறையில் பட்டாசு வெடிப்பதால் விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, இந்த புத்தாண்டு காலத்தில் குடும்ப உறுப்பினர்களுடன் இது போன்ற செயற்பாடுகளில் கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், கடந்த காலங்களில் டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. சுகாதாரத் துறைகள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். உண்மையில், கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையையும், இறப்பு விகிதத்தையும் இந்த வருடம் குறைக்க முடிந்துள்ளது.

ஜனவரி மாதத்தில் 64 டெங்கு அபாய வலயங்கள் இருந்தன. இதுவரை இரண்டு வலயங்கள் வரை கட்டுப்படுத்த முடிந்துள்ளது. ஜனவரி மாதத்திற்குள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இது இன்று 200 நோயாளிகளாக குறைந்துள்ளது.

காலநிலையும் இதில் தாக்கம் செலுத்தியது என்பதைக் கூற வேண்டும். ஜனவரி முதல் இதுவரை 20,365 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 7289 பேர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர். 2024ஆம் ஆண்டில் 08 டெங்கு மரணங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன.

மேலும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தொற்றுநோய் சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு தற்போது மிகவும் செயல்திறன் மிக்க வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொற்றுநோய் சூழ்நிலைகளில் இருந்து விடுபட இது மிகவும் உதவியாக இருக்கும்-என்றார். (அ)

# நாட்டின் வரிசை யுகத்தை நிறைவுக்கு கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில்!



## மனுஷ நாணயக்கார பாராட்டு

கொழும்பு, ஏப். 06

"பொருளாதாரத்தை அபிவிருந்தி செய்வதற்கு நாட்டிற்கு மேலும் பல முதலீடுகள் தேவைப்படுவதாக" அமைச்சர் மனுஷநாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டின் வரிசையுகத்தை நிறைவுக்கு கொண்டுவந்தவர் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க என்றும் அவர் கூறினார்.

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

வீழ்ச்சியடைந்து காணப்பட்ட பொருளாதாரம் இன்று வலுவடைந்து வருகின்றது.

பொருளாதாரத்தை அபிவிருத்தி நோக்கி கொண்டு செல்லக்கூடிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டிற்கு முதலீடுகள் தேவைப் படுகின்றன.இந்த நாட்டிற்கு திறந்த பொருளாதாரத்தை அறி முகப் படுத்தியவர் ஜே.ஆர். ஜயவர்தன. இன்று அவரது வழி காட்டலில் ஜனாதிபதி வேலைத் திட்டங்களை முன் னெடுத்து வருகின்றார். இன்று நாட்டின் பல துறைகள் அபி விருத்தி அடைந்துவருகின்றன - என்றார்.

# மட்டக்களப்பில் பாரிய தீ விபத்து

## பெறுமதியான பொருட்கள் சேதம்

மட்டக்கலப்பு, ஏப். 06

**மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட நகர் பகுதி உள்ள மூன்று மாடி கட்டடத்தில் மேற்தளத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.**

**நேற்று முன்தினம் ஏற்பட்ட இந்த தீ விபத்தின்போது 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து முற்றாக சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட ரயில் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள மூன்று மாடி கட்டடத்தின் மேற்களத்தில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாக மாநகர சபை தீயணைப்புப் படை பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இருப்பினும் தீயணைப்பு படை பிரிவு வருவதற்கு முன்னரே பூட்டி இருந்த வீட்டில் உள்ளிருந்த மின்சார உபகரணங்கள், விலை உயர்ந்த வீட்டின் தளபாடங்கள் அனைத்தும் தீயில் கருகியுள்ளன.



இதனால் சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்துள்ளன. மின் கசிவு காரணமாக தீ விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# விசேட தேவையுடையவர்களுக்கு நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு

அம்பாறை, ஏப். 06

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விசேட தேவையுடையவர்களுக்கு நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுமார் 92 பயனாளிகளுக்கு இருக்கை நாற்காலிகள் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நாற்காலிகள் கிண்ணியா நகர சபை முன்னாள் தவிசாளர் எம்.எம்.நிவாஸின் வேண்டுகளுக்கு அமைய முஸ்லிம் ஹென்ஸ் நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.எம். ஹஸ்மி, கிண்ணியா பிரதேச செயலகத்தின் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் எப்.எம்.பஹ்மி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# கல்முனை வர்த்தக சங்கத்தின் இப்தார்



அம்பாறை, ஏப். 06

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு கல்முனையில் இடம் பெற்றது.

வர்த்தக சங்கத்தின் தலைவர் தலைமையின் நடைபெற்ற நிகழ்வுக்கு மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பரிசளிப்பும் இப்தார் நிகழ்வும்

அம்பாறை, ஏப். 06

புனித ரமழான் காலத்தில் மக்களின் ஆன்மீகச் செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை அல்-இபாதா கலாசார மன்றத்தின் மூலம் 13ஆவது வருடமாக நடைபெறும் ஹதீஸ் மஜ்லிஸ் நிகழ்வினைத் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வும், பரிசளிப்பு மற்றும் பாராட்டு வைபவமும் நேற்று முன் தினம் மாலை அட்டாளைச் சேனையில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் மௌலவி எம்.ஐ.சப்றி தலைமையில் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமா வெப்பையின் வழிப்படுத்தலின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



இந்நிகழ்வின்போது புனித ரமழான் காலத்தில் கடந்த இருபது தினங்களுக்கு மேலாக தொடரும் விஷேட மார்க்க சொற்பொழிவுகளை மையப்படுத்தி இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், அட்டாளைச் சேனை பிரதேசத்தில் இருந்து அண்மைக் காலத்தில் பொதுப் பரீட்சைகளில் திறமை காட்டியவர்கள் மற்றும் புதிதாக உயர் பதவிகளில் இணைக்கப்பட்டவர்கள் போன்றோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது கிழக்கிலங்கை அரபுக் கலாசாலை முதல்வர் மௌலவி ஏ.எல்.எம்.அஷ்ரஃப் ஷர்க்கியினால் விஷேட மார்க்க சொற்பொழிவும் துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. (அ)

# யானை தாக்குதலுக்கு உள்ளானவருக்கு நிதி

அம்பாறை, ஏப். 06

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மலையடிக்கிராமம் -04 ஐ சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அண்மையில் வீரச்சோலையில் வைத்து யானை தாக்குதலுக்கு உட்பட்டு காயமடைந்தவமைக்கான மருத்துவ நிவாரண கொடுப்பனவு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் பணிப்புரைக்கமைய கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீமினால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ் அஸாருதீனும் கலந்து கொண்டார். (அ)



# காஸாவுக்கு எல்லை ஊடான விநியோகத்தை தற்காலிகமாக அனுமதிக்கின்றது இஸ்ரேல்!




**ஜெருசலேம், ஏப். 06**

**தனது எல்லைகளுக்கு ஊடாக காஸாவுக்கு உதவிப் பொருட்கள் விநியோகத்தை தற்காலிகமாக இஸ்ரேல் அனுமதிக்கவுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

இதன்படி, காஸாவின் வட பகுதியிலுள்ள எரீஸ் கடவையை ஒக்ரோபர் 7 ஆம் திகதியின் பின்னர் முதல் தடவையாக இஸ்ரேல் திறக்கவுள்ளது.

அத்துடன், காஸாவின் வட பகுதியிலிருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இஸ்ரேலிய நகரான அஷ்தோத்திலுள்ள துறைமுகத்துக்கு ஊடாக விநியோகங்களை மேற்கொள்ளவும் இஸ்ரேல் அனுமதித்துள்ளதாகவும், ஜோர்தானிலிருந்து வரும் உதவிகளை அதிகரிப்பதற்கு அனுமதித்துள்ளதாகவும் இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காஸா விடயத்தில் தனது கொள்கையில் கடும் மாற்றம் ஏற்படலாம் என அமெரிக்க எச்சரித்த சில மணித்தியாலங்களில் இஸ்ரேல் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. (அ)

# ஆயுதக்குழுவின் தாக்குதலில் 10 ஈரானியப் படையினர் பலி



தெஹ்ரான், ஏப். 06

ஈரானில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் ஈரானிய அரச படையினர் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுடனான எல்லைக்கு அருகிலுள்ள சிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் இச்சம்பம் இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாத தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் 10 பேர் கொல்லப்பட்டனர். 18 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர் என ஈரானிய அரச தொலைக்காட்சி தெரிவித்தது.

ஜெய்ஷ் அல் அத்ல் எனும் இயக்கம் இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது. ஈரான், அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் இந்த இயக்கத்தை பயங்கரவாத குழுவாக பிரகடனப் படுத்தியுள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் 11 ஈரானிய படையினர் கொல்லப்பட்ட தாக்குதலுக்கும் ஜெய்ஷ் அல் அத்ல் உரிமை கோரியிருந்தது. (அ)

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இன்று இஸ்ரேலுக்கு ஆயுத தடை கோரும் பிரேரணை



ஜெனிவா, பெப். 06

இஸ்ரேலுக்கு ஆயுதத் தடை விதிக்கும் பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இன்று பரிசீலிக்கப்படவுள்ளது.

காஸாவில் இனப்படுகொலைக்கான ஆபத்து உள்ளதால் இஸ்ரேலுக்கு ஆயுதத் தடை விதிக்க வேண்டும் என இப்பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

57 நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் சார்பில் பாகிஸ்தர்ன இப்பிரேரணையை முன்வைத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதன்படி, பிரேரணை நிறைவேற்றப்படுதற்கு 24 நாடுகளின் ஆதரவு தேவை.

எனினும், ஏதேனும் நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றாமல் விட்டால், குறைந்த எண்ணிக்கையான வாக்குகளுடனும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியும். (அ)

# ரஷ்யா-உக்ரைன் போரில் ஈடுபட்ட இரு இந்தியர்கள் நாடு திரும்பினர்

புதுடில்லி, ஏப். 06

உக்ரைன்-ரஷ்ய போரில் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்ட இரு இந்தியர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

ரஷ்யா - உக்ரைன் இடையே கடந்த 2022 பெப்ரவரியில் தொடங்கிய போர் 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கிறது. இப்போரில் ரஷ்யா சார்பில் ஈடுபட இந்தியர்கள் கட்டாயபடுத்தப் படுவதாகவும். மறுப்பவர்கள் மீது பொய் குற்றச்சாட்டின் கீழ் நடவடிக்கை எடுப்போம் என்று மிரட்டுவதாக அங்கு சென்ற இந்தியர்கள் சிலர் சமூக வலைத்தளங்களில் வீடியோ வெளியிட்டனர். இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இந்தியர்களை மீட்க வெளியுறவு அமைச்சகம் முயற்சி



மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவில் இருந்து மீட்கப்பட்ட கேரளாவின் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பிரின்ஸ், டேவிட் முத்தப்பன் ஆகிய இருவர் கடந்த இரு நாட்களில் வீடு திரும்பியுள்ளனர். தனியார் முகவர்கள் மூலம் ஏமாற்றப்பட்டு, ரஷ்யா அழைத்துச் செல்லப்பட்ட இருவரும் தங்களுக்கு நேர்ந்த துயரத்தை விளக்கினர்.

முத்தப்பன், டில்லியில் மத்திய அரசு அமைப்புகளிடம் வாக்குமூலம் அளித்த பிறகு புதன்கிழமை இரவு திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார்.

அவர் கூறும்போது-அடிப் படைப் பயிற்சிக்கு பிறகு நாங்கள் நேரடியாக போர் முனைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். உக்ரைன் ராணுவத்துக்கு எதிராக போரிட கட்டாயப்படுத்தப்பட்டோம். நான் உயிருடன் வீடு திரும்புவேன் என்று சிறிதும் நினைக்கவில்லை-என்றார்.

போரில் காயம் அடைந்து ரஷ்ய மருத்துவமனையில் 30 நாட்களுக்கும் மேலாக சிகிச்சை பெற்ற பிரின்ஸ் கடந்த செவ்வாய்க்கிழமை வீடு திரும்பினார்.

பிரின்ஸ் கூறும்போது-வினீத்,டினு என்கிற எனது 2 நண்பர்கள் இன்னும் யுத்தப் பகுதியில் உள்ளனர். போன் சிக்னல் மூலம் எங்கள்இடத்தின் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்பதால் எங்களால் யாரையும் தொடர்புகொள்ள முடியவில்லை- என்றார். (அ)

# போரை இஸ்ரேல் மிகவிரைவில் முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

## டொனால்ட் டிரம்ப் கோரிக்கை

நியூயோர்க், ஏப். 06

காசா யுத்தத்தை இஸ்ரேல் மிகவிரைவில் முடிவிற்கு கொண்டுவரவேண்டும் என அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹியுஜ் ஹெவிட் என்ற பழமைவாத ஊடகவியலாளருக்கு வழங்கிய பேட்டியில் டொனால்ட் டிரம்ப் இஸ்ரேலிற்கான இந்த கடுமையான செய்தியை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரசார யுத்தத்தில் தோல்வியடைந்து கொண்டிருக்கின்றது என தெரிவித்துள்ள டிரம்ப், இரத்தக்களறியை வேகமாக முடிவிற்கு கொண்டுவர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இதனை முடிவுக்கு கொண்டுவருவோம். சமாதானத்தை ஏற்படுத்துவோம். மக்களை கொலை செய்வதை நிறுத்துவோம் என டிரம்ப் தெரிவித்தார்.

அவர்கள் இதனை செய்தாக வேண்டும். இயல்பு நிலை சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதால் இஸ்ரேல் இதனை மிகவேகமாக செய்யவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் போதுமான அளவுக்கு இஸ்ரேலிற்கு ஆதரவளிக்க வில்லை எனவும் தெரிவித்துள்ள ட்ரம்ப், காசாவில் பொதுமக்களின் உயிரிழப்புகள் தொடர்ந்தும் அதிகரித்துவரும் நிலையில் இஸ்ரேல் பயன்படுத்தும் தந்திரோபாயங்கள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இஸ்ரேல் செயற்படும் விதம் எனக்கு பிடித்துள்ளதா என்பதை தெரிவிக்க முடியாது. ஏனென்றால் நீங்கள் வெற்றி பெறவேண்டும். ஆனால் அந்த வெற்றிக்கு நீண்ட காலம் எடுக்கின்றது எனவும் டிரம்ப்



தெரிவித்தார்.

இஸ்ரேல் தனது தாக்குதல் குறித்த வீடியோக்களை வெளியிடுவதை அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி சாடினார்.

பயங்கரவாத உட்கட்டமைப்புகளுக்கு எதிரான தாக்குதல்கள் என தெரிவித்து இஸ்ரேல் விமானக் குண்டுவீச்சுகள் உட்பட ஏனைய தாக்குதல்களின் வீடியோக்களை வெளியிட்டு வருகின்றது

அவர்கள் அவ்வாறான வீடியோக்களை வெளியிடக்கூடாது. அதன் காரணமாகவே இஸ்ரேல் பிரசார யுத்தத்தில் தோல்வியடைகின்றது என டிரம்ப் தெரிவித்துள்ளார். (அ)

## இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனையை நிறுத்த பிரித்தானியா மீது சர்வதேசம் அழுத்தம்?

லண்டன், ஏப். 06

இஸ்ரேலுக்கான ஆயுத விற்பனையை நிறுத்துமாறு பிரித்தானியா மீது சர்வதேச ரீதியில் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஏழு நிவாரணப் பணியாளர்கள் கொல்லப்பட்டதாக கூறப்படும் பின்னணியில் இந்த அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட நாடுகளிடமும் இஸ்ரேலுக்கான ஆயுத விநியோகத்தை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# மீண்டும் நெருக்கடி ஏற்படாதிருக்க ரணிலே ஜனாதிபதியாக வேண்டும்!

## செகான் சேமசிங்க வலியுறுத்து

கொழும்பு, ஏப். 06

**நாட்டில் மீண்டும் நெருக்கடி நிலை ஏற்படாதிருக்க வேண்டுமெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டுமொருமுறை வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் செகான் சேமசிங்க தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு- ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்கும் முடிவே எடுக்கப்பட வேண்டும். அத்துடன், தேர்தலில் வெற்றி பெற்று அவர் ஜனாதிபதியாக வேண்டும். கடந்த 18 மாதங்களில் பல்வேறு நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டை மீட்டு வருகின்றார். அதற்கான பணி இன்னும் முடியடையவில்லை . எனவே, முன்னோக்க செல்ல இடமளிக்கப்பட வேண்டும். அதனை மாற்றினால் நாடு பின்னோக்கி செல்லக்கூடும்.

எனவே, ரணிலுக்கு மீண்டு மொருமுறை பொறுப்பு வழங் கப்பட வேண்டும். நாடு இருக் கும் இடத்தில் இருந்து சிறந்த நிலைக்கு செல்ல வேண்டுமெ னில் ரணிலின் தலைமைத்துவம் அவசியம்-என்றார்.

(அ)

# இணுவில் ரயில் கடவைக்கு புதிதாக சமிக்ஞை விளக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 06

இரண்டு உயிர்களை பலியெடுத்த இணுவில் ரயில் கடவைக்கு சுமார் 80 இலட்சம் ரூபாய் செலவில் சமிக்ஞை விளக்கு மற்றும் பாதுகாப்பு கதவு ஆகியன பொருத்தப்பட்டு அதன் செயல்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி, வானில் பயணித்துக் கொண்டிருந்த இளம் குடும்பத்தினர் இணுவில் பகுதியில் அமைந்திருந்த குறித்த பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடக்க முற்பட்டபோது ரயிலிலுடன் மோதுண்டனர்.

குறித்த விபத்தில் இளம் குடும்பத் தலைவரும் சில மாதங்களேயான பச்சிளம் குழந்தையும் ஸ்தலத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தனர். குழந்தையின் தாய் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ் விபத்தினையடுத்து, பிரதேச மக்களினால் ரயில் கடவையில் எதிர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 80 லட்சம் ரூபாய் செலவில் ரயில்வே திணைக்களத்தினால் சமிக்ஞை விளக்கு மற்றும் பாதுகாப்பு கதவு ஆகியன பொருத்தப்பட்டு, சம்பிரதாயபூர்வமாக அதன் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பத்து வருடங்களின் பின்னர் போஞ்சி விலையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப். 06

சுமார் பத்து வருடங்களின் பின்னர் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ போஞ்சியின் மொத்த விலை 47 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை குறைவடைந்துள்ளதாக தம்புள்ளை பொருளாதார நிலைய வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

அனைத்து வகையான மரக்கறி வகைகளின் விலைகளும் சடுதியாக குறைவடைந்துள்ளமையினால், மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, நேற்றைய மரக்கறி விற்பனை விலை விவரம்-

நுவரெலியா உருளைக்கிழங்கு கிலோ ஒன்று 250 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

பாகிஸ்தான் உருளைக்கிழங்கு கிலோ ஒன்று 130 ரூபாய் முதல் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பாகிஸ்தான் பெரிய வெங்காயம் கிலோ ஒன்று 500 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

சீனா பெரிய வெங்காயம் கிலோ ஒன்று 250 ரூபாய் முதல் 270 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

இந்திய சிறிய வெங்காயம் கிலோ ஒன்று 200 ரூபாய் முதல் 260 ரூபாய் வரையும், யாழ்ப்பாண சிறிய வெங்காயம் கிலோ ஒன்று 200 ரூபாய் முதல் 300 ரூபாய் வரையும் விற்பனை செய் யப்படுகிறது.

அத்துடன் வெள்ளை பூடு கிலோ ஒன்று 450 ரூபாய் முதல் 470 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர் ஆவணப்படங்கள் வெளியீடு!

யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலைச் சித்திரிக்கும் பத்து ஆவணப்படங்கள் எதிர்வரும் 08ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் திரையிடப்படவுள்ளன.

தமிழரின் பாரம்பரியமாக விளங்கும் தவில் இசைக்கருவியின் உருவாக்கமும் நுட்பமும் பற்றிய பதிவான 'தவில் கொட்டு', காரைநகரின் ஊரி கிராமப் பெண்கள் தமது சொந்தக் கால்களில் நின்று மீன்பிடித் தொழிலாற்றுவது பற்றிப் பேசும் 'அலைமகள்', தீயில் எரிந்து போன லயன் குடியிருப்புகளுக்குப் பதிலாக மாற்று வீடுகள் கிடைக்கும் எனக் காத்திருக்கும் மலையக மக்களின் துன்பங்களைப் பதிவுசெய்யும் 'தணல்', மட்டக்களப்பிலுள்ள வேப்பவெட்டுவானில் செங்கல் கைத்தொழில் தயாரிப்பு மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் 'கல்வாடி', மலையகப் பெண்கள் மாதவிடாய்க் காலங்களிலும் மலைகளில் ஏறிக் கொழுந்து பறிப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி பேசும் 'கசிவு', தற்சார்பு வாழ்க்கைமுறை ஊக்குவிப்புப் பற்றிச் சிலாகிக்கும் 'உயிர்மை', தமிழர் கட்டடமரபின் பொக்கிஷங்களில் ஒன்றைக் கால ஆவணப்படுத்தும் 'நாற்சார் வீடுகள்', கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் பணிச்சுமைகளை வெளிக்காட்டும் 'காவலின் காயங்கள்', மலையக மக்களின் நில உரிமை பற்றிய சவால்களைப் பேசும் 'நிலம்', வயல்வெளிகளில் இராக்காவல் காக்கும் விவசாயிகளின் வாழ்வியலைப் பதிவுசெய்த 'உறங்கா விழிகள்' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்த ஆவணப்படங்கள் ஊடகக் கற்கைகள் மாணவர்களின் எண்மியக் கதைசொல்லல் கற்றலின் பெறுதிகளாக அமைவதும், வருடந்தோறும் ஆவணப்படத் திரையிடலை ஊடகக் கற்கைகள் துறை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# மைத்திரி தொடர்பான வழக்கு 10ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 06

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வழங்கிய வாக்குமூலம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் குறித்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் அவர் முன்னிலையாகியிருக்க வில்லை.

எனினும், தாம் ஏற்கனவே இந்தவிடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளதால் நேற்று முன் தினம் வாக்குமூலம் வழங்க வேண்டிய அவசியமில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதிமன்றத்துக்கு தமது சட்டத்தரணி ஊடாக அறியப்படுத்தியிருந்தார்.

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலை நடத்தியது யார் என்பது தமக்கு தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் 22ஆம் திகதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கல்வி அமைச்சின் இணையத்தளத்தை வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கை

கொழும்பு, ஏப். 06

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ, இணையத்தளத்திற்கு சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று இந்த தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், தற்போது அதனை வழமைக்கு கொண்டுவருவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை கணினி அவசர தயார் நிலை குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உயர் தரத்தில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பாடத்தை கற்பதாக கூறும் மாணவர் ஒருவரினால் இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் காணப்படும் பாதுகாப்பு அச்சுறுத்தலை வெளிப்படுத்துவதற்காகவே, இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# இலங்கையின் பல பிரதேசங்களுக்கு நேராக உச்சம் கொடுக்கும் சூரியன்!

கொழும்பு, ஏப். 06

சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வின் காரணமாக நேற்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில், சூரியன் இலங்கையின் பல பிரதேசங்களை அண்மித்ததாக நகர்ந்து செல்லுமென சிரேஷ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்துள்ளார்.

நேற்று மதியம் 12.12 மணியளவில் வலப்பிட்டிய, எல்பிட்டிய, மொறவக்க மற்றும் திஸ்ஸ மஹாராம போன்ற இடங்களுக்கு நேராக சூரியன் உச்சம் கொடுத்தது.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, வட மேல், சபரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் நேற்று அதிகரித்த வெப்பநிலை காணப்பட்டது.

# கொங்கிறீட் வளையத்தில் சிக்கி மாணவன் பலி; விசாரணை முன்னெடுக்குமாறு பணிப்புரை

கொழும்பு, ஏப். 06

கொங்கிறீட் வளையம் ஒன்றில் சிக்கி மஸ்கெலியாவில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட மஸ்கெலியா பகுதியில் உள்ள தமிழ் பாடசாலை ஒன்றில் 6ஆம் தரத்தில் பயிலும் மாணவர் ஒருவரே நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

பாடசாலை மைதானத்தில், குறித்த கொங்கிறீட் வளையம் வைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் ஒன்று உருண்டு சென்றதில் குறித்த மாணவர் சிக்குண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பலத்த காயமடைந்த மாணவர் மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

குறித்த கொங்கிறீட் வளையம் தோட்ட நிர்வாகத்தினால் பாடசாலை வளாகத்தில் இறக்கி வைக்கப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# இந்திய முறைமையின் வெற்றி அநுரவுக்கு சுட்டிக்காட்டினேன்

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 06

'இந்திய முறைமை'யின் வெற்றி குறித்து அநுரகுமாரவுக்கு தான் சுட்டிக் காட்டினார் என்று சுமந்திரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரவை சந்தித்துப் பேசிய போதே இதனைத் தெரிவித்ததாகக் கூறினார். இந்த சந்திப்பு நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த அநுரகுமார திஸநாயக் கவை சுமந்திரன் சந்தித்தார். இந்த சந்திப் பில் பேசப்பட்டவை தொடர்பில் சுமந்தி ரன் தெரிவித்தவை வருமாறு,

இந்தியா பல்லின சமூகங்கள் வாழும் நாடாக இருக்கின்றது. அங்கு இன ஒற்றுமை காணப்படுவதோடு மன் மோகன் சிங் பிரதமராகப் பதவி வகித் துள்ளார்.

அப்துல்கலாம் ஜனாதிபதியாகப் பதவி வகித்துள்ளார். தற்போதைய ஜனா திபதி கூட தாழ்த்தப்பட்ட சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்பவராக இருக்கின் றார். உள்ளிட்ட விடயங்களை சுட்டிக் காட்டியிருந்தார். அவருடைய சுட்டிக் காட்டல்களை அவதானித்திருந்த நான், பின்னர் அவருடனான சந்திப்பின்போது, இந்தியாவில் சிறுபான்மை, மற்றும் நலிவுற்ற சமூகத்தினர் அவ்விதமான பதவிகளுக்கு வருவதற்கும், இனங்க ளுக்கு இடையில் ஒற்றுமை



நிலவுவதற்கும் காரணமொன்று உள்ளது எனக் குறிப்பிட்டேன்.

அச்சமயத்தில் அநுர, சமஷ்டி அடிப் படையிலான அதிகாரப்பகிர்வு அமுலாக் கப்பட்டுள்ளது என்று கருதுகின்றீர்களா எனக் கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில், இந்தியாவில் அவ்வித மான நிலைமைகள் நிலவுவதற்கு அங் குள்ள அதிகாரப்பகிர்வு முறை ஒருகார ணமாக இருக்கின்றபோதும் மிகவும் முக்கியமான காரணமாக இருப்பது மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப் பட்டுள்ளது தான் என்ற விடயத்தினை குறிப்பிட்டேன்.

அத்துடன், அவ்விதமான மொழி வாரியான அடிப்படையில் மாகாணங் கள் இங்கும் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப் படுவது அவசியமானது என்பதால்தான் வடக்கு, கிழக்கும் இணைக்கப்பட வேண் டும் என்ற விடயத்தை நாம் தொடர்ச்சி யாக வலியுறுத்துகின்றோம் என்பதைச் சுட்டிக்காட்டினேன்.

இதேநேரம், வடக்கு, கிழக்கில் உள்ள சமகால அரசியல் நிலைமைகள் சம்பந்த மாகக் கலந்துரையாடியதோடு, தொடர்ச்சியாகப் பரஸ்பர கலந்துரை யாடல்களை முன்னெடுப்பதென்றும் இணக்கம் காணப்பட்டது - என்றார்.

## சஜித்...

இந்தக் கூட்டணியில் மனோ கணே சன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகள் ஆகியவற் றுடன் கூட்டணி உடன்பாடு எட்டப் பட்டதாக சஜித் தரப்பு அறிவித்துள்ள போதிலும் இது குறித்து அவர்கள் அமைதி காத்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்ப டுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், ஜீ. எல். பீரிஸ் தலைமையில், டிலான் பெரேரா, நாலக கொடஹேவா, உபுல் கலப்பத்தி, வசந்த யாப்பா பண்டார மற்றும் கே. பி. எஸ். குமாரசிறீ ஆகியோரே இவ்வாறு இணைந்தனர்.

கூட்டணியின் ஆரம்ப நிகழ்வுகள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றன.

இந்தக் கூட்டணி ஆரம்ப நிகழ்வில் சஜித் தரப்பு உடன்பாடு எட்டப்பட்ட தாகத் தெரிவித்த ஏனைய கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கவில்லை என்ப தும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## தமிழ் அரசு...

மாவை சேனாதிராசா, சி. சிறிதரன், ப. சத்தியலிங்கம், ச. குகதாசன், சே. குலநாய கம், சீ. யோகேஸ்வரன் ஆகிய 6 பிரதி வாதிகளும், யாப்பு மீறப்பட்டுள்ளதை ஏற்று மனுதாரர் கோரிய நிவாரணத்தை வழங்குவதாக ஒத்துக்கொண்டனர்.

இந்நிலையில், பிரதிவாதிகளில் ஒருவ ரான எம். ஏ. சுமந்திரனின் கருத்தை அறி வதற்காக நேற்றைய தினம் நீதிமன் றம் வழக்கை விசாரணைக்கு எடுத் திருந்தது. இதன்போது, சுமந்திரன் ஆட்சேபனை சமர்ப்பித்தார். அவர், 20 பேரை இணைத்தது மட்டுமே சட்ட ரீதியற்ற நடவடிக்கை, யாப்பின்படியே தேர்தல் நடந்ததாக அவர் குறிப்பிட் டார்.

அத்துடன், இலங்கை தமிழ் அரசு கட்சியின் சி. இரட்ணவடிவேல் இடை புகு மனுதாரராக வழக்கில் நுழைந்தார். இதற்கு சி. சிறீதரன், ச. குகதாசன் ஆகி யோருக்காக முன்னிலையான சட்டத் தரணி கே. வி. தவராசா கடுமையான ஆட்சேபனை தெரிவித்தார்.

இதையடுத்து, இடைபுகு மனுதா ரரை இணைப்பதற்கு எதிராகவும், மூல வழக்குக்கு எதிராகவும் ஏனைய 6 பேரும் ஆட்சேபனை தெரிவிப்பதற்காக எதிர் வரும் 24ஆம் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாமல்...

ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கும் வேட்பா ளரே வெற்றி பெறுவார். சவாலுக்கு மத்தியில் இந்த நாட்டை முன்கொண்டு செல்லக்கூடிய ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஜனாதிபதி தேர்தல் வேட் பாளருக்கு பொருத்தமானவரும் அவரே.

நாமல் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு அவருக்கு மேலும் காலஅவகாசம் காணப்படுவதாக அவ ரது தந்தை மஹிந்த ஒருசந்தர்ப்பத்தில் கூறியிருந்தார். எனவே பல வருட கால அரசியல் அனுபவம் கொண்ட ஒருவ ரால் முன்வைக்கப்படும் கருத்துக்களை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தாம் ஜனாதிபதி தேர்தல் வேட்பாள ராக முன்னிலையாக போவதாக அவர் இதுவரை கூறவில்லை. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நாமல் ஜனாதிபதி தேர் தல் வேட்பாளராக களமிற்ங்கினால் கட்சிக்குள் பிளவு ஏற்படும்.எனவே கட்சி யின் தேசிய அமைப்பாளர் என்ற ரீதியில் அவ்வாறான ஒரு தீர்மானத்தை நாமல் ஒருபோதும் எடுக்கமாட்டார்.

பொதுஜன பெரமுனவுக்குள் விரிசல் ஏற்படாத வகையிலேயே அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். ஐக்கிய மக்கள் சக்தியின் பலர் ஜனாதி பதிக்கு ஆதரவு வழங்க தயாராக உள் ளனர் - என்றார். (அ)

## சிமெந்து...

பிரிவிற்குட்பட்ட பொன்னாவெளி பகுதியில் சிமெந்து தொழிற்சாலைக் கான சுண்ணக்கற்களை பெற் றுக்கொள் வதற்கு மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று அமைச்சர் குறித்த தொழிற்சாலையை ஆரம்பித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் மக்கள் எதிர்ப்பை வெளியிட் டனர்.

இதன்போது அமைதியின்மை ஏற்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், போராட்டக்கார ருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் பொலிசார் கட் டுப்படுத்தினர்.

தொடர்ந்தும் போராட்டம் இடம் பெற்றதுடன், திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றன.

ஆயினும், மக்களின் தொடர் எதிர்ப் பினால் குறித்த நிகழ்வு இரத்து செய் யப்பட்டு அமைச்சர் திரும்பியுள்ளார். (அ)

## ஒரேநாளில்...

முறைமையின் அடிப்படையில் இரண்டு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவது என்பது நடைமுறைச் சாத்தியம் அற்ற விடயமாகும் - என்றார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்த லுக்கு நாடளாவிய ரீதியில் ஒரே ஒரு உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டு மட்டுமே வழங்கப்படுவதாகவும் ஆனால் பொதுத் தேர்தலுக்காக 22 தேர் தல் மாவட்டங்களுக்கு 22 வாக்குச் சீட்டு கள் வழங்கப்பட வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன், சில அரசியல் கட்சிகள் பொதுத் தேர்தலில் போட்டியிட்டதா லும், ஜனாதிபதித் தேர்தலில் வேறொரு வேட்பாளரை ஆதரிக்கின்ற நிலை காணப்படுவதால் இது பல சிக்கல்களை உருவாக்கும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துமாறு இதுவரை எந்தக் கட்சியும் தம்மிடம் கோரவில்லை என்றும் தேர் தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## எதிர்பார்த்தது...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரானநேற்றைய வழக்கு விசாரணை யின் பின்னர் நீதிமன்றத்துக்கு வெளியில் கருத்து வெளியிட்டார் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா.

இந்த வழக்கில் எதிராளிகளான சிறீதரன் எம். பி. மற்றும் முன்னாள் எம். பியான யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி.தவராசா நீதிமன்றில் முன்னிலை யாகியிருந்தார்.

இந்த வழக்கில், எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் இந்த வழக்கு தொடர் பில் தமது ஆட்சேபனையை சமர்ப்பண மாக எழுத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பித் திருந்தார். இந்த விடயத்தையே சுட்டிக்காட்டினார்.

"சில விட்டுப்புக்கொடுப்புகளைக் கொடுத்து, கட்சியை நிமிரச் செய்வ தற்காகச் சில விடயங்களைக் கடந்த தவணையின்போது நாம் முன்னெடுத் தோம். நாம் எது நடக்கும் என்று எதிர்பார்த்தோமோ துரதிஷ்டவசமாக அதுவே நடந்து விட்டது. இன்று (நேற்று) யாராவது எதிராளி வந்து ஆட்சேபனை தெரிவிக்காமல் இருந்தி ருந்தால் இன்று (நேற்று) வழக்கு முடிவ டைந்து இருக்கலாம். ஆகவே, எதை நாம் எதிர்பார்த்தோமோ அது நடந்து விட்டது. அது மிகவும் கவலைக்குரிய விடயம். எதிர்வரும் 24ஆம் திகதி நாம் ஆட்சேபனை சமர்ப்பிக்க வேண்டும். அதைச் சமர்ப்பிப்போம்." - என்றார் தவராசா.

## மாவீரருக்கு..

அமுல்படுத்தும்படி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடக் கோரி சமர்ப் பிக்கப்பட்ட மனுவொன்று விசார ணைக்கு அழைக்கப்பட்டபோதே பொலிஸ் மா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணி ஷ மிந்த விக்கிரம இந்த அறிவித்தலை விடுத்தார்.

எஸ்.யு.பி.கரலியத்த மற்றும் மாயா துன்ன கொரயா ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்பாக இந்த மனு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட் டது.

இதுவரையில் மாவீரர் நாள் நிகழ்வு கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசார ணைகள் தொடர்பிலான முழுமையான அறிக்கையை தாக்கல் செய்துள்ளதாக பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஷமிந்த விக்ரம நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் மா அதிபரும் நீதிமன்றில் வாக்குமூலம் சமர்ப்பித்துள்ளதோடு, அதன் ஊடாக மாவீரர் துயிலுமில்லங்கள் தொடர்பான சட்டத்தை சிறந்த முறையில் அமுல் படுத்த பொலிஸார் பாடுபட்டுள்ளதாக வும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள் ளார். இனிமேல் இவ்வாறான சட்ட விரோத சம்பவங்கள் தொடர்பில் அதிக பட்சமாக சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என நீதிமன்றில் உறுதிமொழி வழங்குவதாக சட்டத் தரணி குறிப்பிட்டுள்ளார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்த சட்டவிரோத செயல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் மா அதிபர் நீதிமன்றில் உறுதிமொழி வழங்கியிருப் பதால், இந்த மனுவை தொடர வேண் டிய அவசியமில்லை என தெரிவித்தார்.

இதன்படி மனுவை வாபஸ் பெற அனுமதிக்குமாறு சட்டத்தரணி நீதிம ன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அதன்படி, மனு மீதான விசார ணையை முடித்துக் கொள்ள முடிவு செய்த மேல்முறையீட்டு நீதிமன்ற ஆயம், பின்னர் மனுவை வாபஸ் பெற அனுமதித்தது. (அ)

## அரசியல்...

ஆய்வுப் பணிகள் தொடர்பில் சில அரசியல் தரப்புகளால் உண்மைக்குப் புறம்பான கருத்துகள் பரப்பப்பட்டுள் ளன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். மேலும், சுயலாப அரசியலுக்கான கபடத்தனங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

பூநகரி - பொன்னாவெளி பிரதேசத் தில் சிமெந்து தொழிற்சாலை அமைப்ப தற்கான ஆய்வுப் பணிகள் நேற்று நடந் தன. இந்த நடவடிக்கைக்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட மக்களுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேச முயன்றார். இதையடுத்து, அவர் அங்கி ருந்து விரட்டப்பட்டார். இதன் பின்னர் அவரின் ஊடகப் பிரிவு விடுத்த அறிக் கையிலேயே மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. (ஐ)

## வலி.வடக்கில்...

குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அள வைத் திணைக்களத்தின் வாகனத்தையும் இடை மறித்து போராட்டத்தில் ஈடுபட் டனர்.

காணி உரிமையாளர்களின் எதிர்ப்பை அடுத்து - காணியை அளவீடு செய்வதற்கு தமக்கு விருப்பம் இல்லை என காணி உரிமையாளர்கள் கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கியதை அடுத்து நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரி வின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் ஜே/226 மற்றும் காங்கேசன்துறை ஜே/233 ஆகிய கிராம சேவகர் பிரிவு களில் உள்ள ஆழ் வான்மலையடி, வேலர் காடு, புண்ணன் புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலைசேனாதிராயன் ஆகிய பகுதி களில் உள்ள சுமார் 29 ஏக் கர் காணி களை சுவீகரிக்கும் நோக்குடன் இந்த அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப் பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

# பொருளாதார கொள்கை சீர்திருத்தம் இலங்கையில் பலன் கொடுக்கின்றது!

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 06

**இரண்டாவது மீளாய்வை நிறைவு செய்வதன் மூலம், இலங்கை அதன் கடன் வழங்குனர்களுட னான ஒப்பந்தத்தை எட்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

அதேநேரம், இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார கொள்கை சீர்திருத்தம் தற்போது பலனளிக்க தொடங்கியுள்ளதாகவும், சர்வதேச நாணய நிதிய தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோஷாக் தெரிவித்துள்ளார்.

விரைவில் பணவீக்கம் குறைந்தமை, வலுவடையும் கையிருப்பு, பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப அறிகு றிகள் என்பன பாராட்டுக்குரிய விளைவுகளாகும் என அவர் குறிப்பிட்டார்.

கணிசமான நிதி சீர்திருத்தங்களைத் தொடர்ந்து பொது நிதிகள் வலுப்பெற்றுள்ளன. மேலும் இந்த சீர் திருத்த வேகம் தொடர வேண்டியது மிகவும் முக்கியமா னது எனவும் அவர் வொஷிங்டனில் இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பின் ஒரு பகுதியான உள்நாட்டுக் கடன் செயற்பாடுகள் பெரும்பாலும் நிறைவடைந்துள் ளதாகவும், திட்ட அளவுருக்களுடன் இணக்கமான வணி கக் கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங்கள் இரண்டா வது மதிப்பாய்வை நிறைவு செய்வதன் மூலம் எட்டப்ப டும் என்ற வலுவான எதிர்பார்ப்பு இருப்பதாகவும் சர்வ தேச நாணய நிதிய தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோஷாக் குறிப்பிட்டார். (அ)

# ரணில்- பஸில் இடையே மீண்டும் இரகசிய பேச்சு!

கொழும்பு, ஏப். 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடை யில் மற்றுமொரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு நேற்று முன் தினம் மாலை இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கும் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் இரண்டு தடவைகள் சந்திப் புகள் இடம்பெற்றுள்ளன.

முன்னதாக கடந்த 21ஆம் திகதியும் சந்திப்புபொன்று இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடந்த வருடம் 24 சந்தேகநபர்கள் பொலிஸ் பாதுகாப்பில் மரணம்!

## மனித உரிமைகள் ஆணைக்குழு தகவல்

கொழும்பு, ஏப். 06

கடந்த வருடத்தில் மாத்திரம் 24 சந்தேகநபர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைத்து உயிரிழந்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலை வர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை மீட்பதற்காக இரகசிய இடங்களுக்கு சந்தேகநபர்களை அழைத்துச் செல்லும் போது பொலி ஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை அதிக ளவில் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தடுப்பு காவலில் உள்ள சந்தேகநபர்க ளுக்கு பாதுகாப்பு வழங்குவது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் கடமை என்றும் ஆணைக்குழு வின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, 2023ஆம் ஆண்டில் மாத்திரம் காவல் துறையினருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 9,417 பொது முறைப்பாடுகள் கிடைத் துள்ளதாகவும் அவற்றில் 44 முறைப்பாடுகள் யுக்திய நட வடிக்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் என்றும் அவர் கூறினார். (அ)



# இந்திய துணைத் தூதுவரை சந்தித்தார் சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 06

இலங்கைக்கான யாழ். இந்தியத் துணைத் தூதரகத் தின் புதிய தூதுவராகப் பொறுப்பேற்றுள்ள ஸ்ரீ சாய் முரளியை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீத ரன் மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத் தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, ஈழத்தமிழர் களது அரசியல் நலன்சார் விடயங்கள் மற்றும் சமகால நெருக்கடிகள் உள்ளிட்ட பலநிலைப்பட்ட விடயங்கள் பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பணத்தின் பின்னால் செல்பவரல்லர் சஜித்!

## கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, ஏப். 06

சஜித் பிரேமதாச எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பணத் தின் பின்னால் சென்றவர் அல்லர். அவருக்கு நீண்ட கொள்கை திட்டம் காணப்படுகின்றது. மக்களுக்கான வேலைத்திட்டங்களை அவரின் தலைமையின் கீழ் முன் னெடுக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கி வருகின்ற பாராளுமன்ற உறுப்பி னர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான சுதந்திர மக்கள் சபை யின் 6 பேர் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய கூட் டணியில் இணைந்து கொண்டனர்.

இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தவொரு அரசாங்கமும் மக்கள் ஆணையூடாகவே அமைக்கப்படவேண்டும். அதேபோன்று எமது அரசாங் கம் இது என்ற உணர்வு மக்களுக்கும் ஏற்படவேண்டும். தற்போதைய அரசாங்கத்தின் தலைமைத்துவத்தை வகிக் கும் ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் இடம்பெற்ற தேர்தலின் போது மக்களால் நிராகரிக்கப்பட்டவர்.

ஆனால் ஆளும் கட்சியினர் வங்குரொத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்தவர் ரணில் என பெருமை கொள்கின்றனர். ஆனால் கடன் மறுசீரமைப்பின் ஊடாக பாதிக்கப்படுவது அப்பாவி பொது மக்கள் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளவில்லை 2048ஆம் ஆண் டில் டிஜிட்டல் பொருளாதாரத்தை நாட்டில் உருவாக் கப்போவதாக கூறுகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய அரசியல் கூட்டணியில் நாம் இன்று கைச்சாத்திட் டுள்ளோம்.

சஜித் பிரேமதாச எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பணத் தின் பின்னால் சென்றவர் அல்லர். அவருக்கு நீண்ட கொள்கை திட்டம் காணப்படுகின்றது. மக்களுக்கான வேலைத்திட்டங்களை அவரின் தலைமையின் கீழ் முன் னெடுக்க முடியும். மக்களின் தேவைகளையும் விருப்பங் களையும் நிறைவேற்றக்கூடிய அரசாங்கம் சஜித் பிரேம தாச தலைமையிலேயே உருவாக்கப்படும். ஜனாதிபதி தேர்தலில் ரணில் தலைமையிலான தற்போதைய அரசாங் கம் தோல்வியடையும்-என்றார். (அ)

# ஜீவனுக்கு கௌரவம்



கொழும்பு, ஏப். 06

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபி விருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் உலகப் பொரு ளாதார மன்றத்தால் இளம் உலகளாவிய தலைவராக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இந்த கௌரவத்தை பெறும் முதல் இலங்கை அமைச்சர் என்ற பெருமையை ஜீவன் தொண்டமான் பெற்றுள்ளார்.

இந்நிலையில், ஜீவன் தொண்டமான், சுத்தமான நீர் அணுகலை மேம்படுத்தியதற்காகவும் சமூகத்தில் புறக்க ணிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தமைக்காக வும் இந்த கௌரவம் அளிக்கப்பட்டுள்ளதாக உலகப் பொருளாதார மன்றம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# நாட்டை மீட்டெடுக்கும் வல்லமை ஐக்கிய மக்கள் சக்தியிடமே உண்டு!

## ரஞ்சித் மத்தும பண்டார கூறுகிறார்

கொழும்பு, ஏப். 06

“நாட்டை மீட்டெடுக்கக்கூடிய வல்லமை ஐக்கிய மக் கள் சக்தியிடமே உள்ளது” என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித் துள்ளார்

ஐக்கிய மக்கள் சக்திக்கும் சுதந்திர மக்கள் கூட்டணிக் கும் இடையில் நேற்று இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப் பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிய டைந்துள்ளது. இவ்வாறான நிலையில் இந்த நாட்டை யார் பொறுப்பேற்பது என்ற கேள்வியே எழுந்துள்ளது. இந்த நாட்டை மீட்டெடுக்கக்கூடிய வல்லமை ஐக்கிய மக்கள் சக்தியாகிய எம்மிடமே காணப்படுகின்றது.

எனவே எமது அடுத்தகட்ட நடவடிக்கையாக ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். ஜீஎல்.பீரிஸ் உள்ளிட்ட குழுவினர் நடைபெறவுள்ள தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். தேர்தல் சவாலை நாம் புதிய கூட்டணியாகவே எதிர்கொள்ளவுள்ளோம்- என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மக்களவைத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா கச்சதீவு சர்ச்சை?

டி.ராமகிருஷ்ணன்

கச்சத்தீவு சர்ச்சை கடந்த சில நாட்களாக தேசிய, மாநிலத் தலைவர்கள் அனைவரும் கையில் எடுத்திருக்கும் பேசுபொருள் ஆகியிருக்கிறது. இது மக்களவைத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற விவாதங்களும் எழுந்துள்ளன.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் இருந்து வெறும் 14 நாட்டிக்கல் மைல் (சுமார் 25 கிமீ) தொலைவில் தான் இருக்கிறது கச்சத்தீவு. இது தொடர்பாக இந்தியா - இலங்கை இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகி 50 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் கூட இந்த சர்ச்சை ஓய்ந்தபாடில்லை. இதுவரை அவ்வப்போது பேசப்பட்ட இந்த விவகாரம், கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மோடி பகிர்ந்த ட்வீட் மூலம் முக்கிய விவாதப் பொருளாகியுள்ளது.

அன்று பிரதமர் தனது எக்ஸ் பக்கத்தில், "யாரைப் பற்றியும் கவலைப்படாமல் கச்சத்தீவை இலங்கைக்கு காங்கிரஸ் தாரைவார்த்திருப்பது ஆர்டிஐ மூலம் பெறப்பட்ட புதிய தகவல்களின் மூலம் அம்பலமாகி உள்ளது. இந்த புதிய தகவல்கள் ஒவ்வொரு இந்தியரையும் ஆத்திரமடையச் செய்துள்ளது. காங்கிரஸை ஒருபோதும் நம்பக் கூடாது என்பதை மக்களின் மனதில் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. கடந்த 75 ஆண்டுகளாக இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டை காங்கிரஸ் பலவீனப்படுத்தி வருகிறது. நாட்டின் நலன்களை அந்த கட்சி முற்றிலுமாகப் புறக்கணித்து வருகிறது" எனப் பதிவிட்டிருந்தார்.

இது போதாதா என்பது போல் மத்திய அமைச்சர்கள் முதல் மாநில பாஜகவினர் வரை பலரும் அதனை வைத்து கருத்து சொல்ல, அதற்கு தமிழகத்தில் திமுக, தமிழக காங்கிரஸ் கமிட்டி தொடங்கி, டெல்லி காங்கிரஸ் மேலிடம் வரை பதிலடி வரவும், ஒரு கட்டத்தில் வெளியுறவு அமைச்சரே விளக்கம் அளித்தார். இப்போது அதையும் சேர்த்துக் கொண்டு விவாதத்தை இன்னும் வலுவாக கட்டமைத்துள்ளன அரசியல் கட்சிகள். இப்படியாக தொடர்ந்து கொண்டிருக்கிறது கச்சத்தீவு சர்ச்சை.

ஆனால், இது எவ்வளவு தூரம் தேர்தலுக்கான விவாதப் பொருளாக உருவெடுத்து நீடிக்கும் என்பது சந்தேகத்துக்கு உரியதாகவே இருக்கிறது. கச்சத்தீவு 1974-ல் இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் 1977-ல் மக்களவைத் தேர்தல் நடந்தது. அதனைத் தொடர்ந்து, இதுவரை நடந்த 12 தேர்தல்களில் 1998 மற்றும் 2014 என இரண்டு முறை மட்டுமே திமுக மற்றும் காங்கிரஸ் ஆதரவு இல்லாத வேட்பாளர்களை ராமநாதபுரம் தொகுதி பெற்றுள்ளது. இப்போது கச்சத்தீவு விவகாரத்தில் பாஜக வசைபாடுவதும் காங்கிரஸ், திமுக ஆகிய இந்த இரு கட்சிகளைத்தான்.

1974-ல் காங்கிரஸ் மத்தியில் ஆட்சியில் இருந்தது. தமிழகத்தில் திமுக ஆட்சி நடந்தது. அதன் பின்னர் ஒவ்வொரு தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியின் வெற்றியாளர்களுக்கு திமுக அல்லது காங்கிரஸின் முழு ஆதரவு இருந்து வந்துள்ளது. 2019-ல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ராமநாதபுரம் தொகுதியில் வெற்றி கண்டது. இந்த முறையும் திமுக - காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெற்றுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் வேட்பாளர் அந்த இரு கட்சிகளின் முழு ஆதரவோடு அங்கே களம் காண்கிறார். இந்தத் தேர்தல் முடிவு புள்ளிவிவரங்களை அலசினாலே கூட கச்சத்தீவு விவகாரத்துக்கும், தேர்தல் அரசியலுக்கும் தொடர்பில்லை எனக் கூறலாம்..

இருப்பினும், அதிமுக மூத்த தலைவரான ஏ.அன்வர் ராஜா (2014-19 அதிமுக எம்.பி), இப்போதைய சூழலைப் பார்க்கும்போது ராமநாதபுரம் தொகுதியில் அதிமுகவுக்கு ஆதரவு கூடும் எனக் கணிக்கிறார். "1974-ல் கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டபோது மத்தியில் காங்கிரஸும், மாநிலத்தில் திமுகவும் ஆட்சியில் இருந்தன. இப்போது 10 ஆண்டுகள் மத்தியில் ஆட்சியில் இருந்த பாஜகவும் கச்சத்தீவு பிரச்சினையில் எதுவும் செய்யவில்லை. அதிமுக முன்னாள் பொதுச் செயலாளரும், தமிழக முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா மட்டும்தான் கச்சத்தீவு மீட்பில் உண்மையான சட்டப் போராட்டத்தை முன்னெடுத்தார். அதனால், இப்போதைய சூழலைப் பார்க்கும்போது ராமநாதபுரம் தொகுதியில் அதிமுகவுக்கு ஆதரவு கூடும்" என்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் ஏ.கோப்பண்ணா கூறுகையில், "கச்சத்தீவு விவகாரம் எப்போதுமே தேர்தல் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தியதில்லை. இந்த முறையும் அதில் மாற்றமேதும் இருக்காது. மாநில மக்கள் இந்த விவகாரத்தில் பிரதமர் மோடியின் வார்த்தைகளை நம்பமாட்டார்கள். தேர்தல் ஆதாயத்துக்காக அவர் இதனைப் பேசுகிறார் என்றும் மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மேலும், கச்சத்தீவுக்கும் மீன்படி விவகாரத்துக்கும் தொடர்பில்லை. ஏனெனில் கடல்வளத்தைப் பொறுத்தவரை நம்மைவிட அதிக வளம் கொண்டதாகவே இலங்கை இருக்கிறது" என்று கூறியுள்ளார்.

பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரான சி.ஆர்.கேசவன் கூறுகையில், "கச்சத்தீவு விவகாரம் திமுக - காங்கிரஸ் கூட்டு துரோகத்தை அம்பலப்படுத்தியுள்ளது. கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டபோது அந்த இரு கட்சிகள்தானே ஆட்சியில் இருந்தன. கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டது சகுனியின் சூதாட்டம் போன்றது. இந்திய நலனில் முக்கியமான ஒன்றை சூதாட்டத்தில் இழந்ததுபோல் இழந்தனர்" எனச் சாடியுள்ளார்.

ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் 6 முறை காங்கிரஸும், 4 முறை அதிமுகவும், 3 முறை திமுகவும், ஃபார்வர்ட் பிளாக், சுயேச்சை வேட்பாளர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலா ஒரு முறையும் வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# வாட்ஜ் பேங்க்: கச்சதீவுக்குப் பதிலாக இந்தியா பெற்ற 6,500 ச.கி.மீ. பகுதியில் என்ன உள்ளது?




முரளிதரன் காசிவிஸ்வநாதன்

காங்கிரஸ் ஆட்சியின்போது கச்சத்தீவை இலங்கைக்கு தந்துவிட்டதாக பா.ஜ.க. குற்றம்சாட்டி வரும் நிலையில், அதற்குப் பதிலாக முக்கியத்துவம் வாய்ந்த "வாட்ஜ் பேங்க்" பகுதியை பெற்றதாக காங்கிரஸ் கூறியிருக்கிறது. இந்த "வாட்ஜ் பேங்க்" பகுதி எங்கே இருக்கிறது? இதன் முக்கியத்துவம் என்ன?

1974ல் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாக் நீரிணை பகுதியில் எல்லையை வகுக்கும்போது, கச்சத்தீவை இந்தியா இலங்கைக்கு தாரை வார்த்து விட்டதாக பா.ஜ.க. குற்றம்சாட்டி வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பா.ஜ.கவின் பெரும்பாலான தலைவர்கள் இந்த விவகாரத்தை முன்னிறுத்திப் பேசி வருகின்றனர்.

இந்த நிலையில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடல் எல்லையைப் பிரிக்கும்போது, வளம்மிக்க "வாட்ஜ் பேங்க்" பகுதியை இந்தியா பெற்றுத்தந்தாக காங்கிரஸ் கட்சி கூறியிருக்கிறது. இந்தப் பகுதி எப்படி இந்தியாவுக்குக் கிடைத்தது?

**வாட்ஜ் பேங்க் பகுதியின் மீது இந்தியாவின் இறையாண்மை**

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் பகுதியில் எல்லையை வகுக்கும் வகையில் இரு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. முதலாவது ஒப்பந்தம் 1974ல் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி, பாக் நீரிணை பகுதியில் எல்லை வகுக்கப்பட்டது. இதன்படியே கச்சத்தீவு இலங்கை பகுதியைச் சேர்ந்தது என முடிவெடுக்கப்பட்டது.

இரண்டாவது ஒப்பந்தம் 1976ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் தேதி கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் மன்னார் வளைகுடா பகுதியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எல்லையை வரையறுத்தது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் வெளியுறவுத் துறைச் செயலர் கேவல் சிங்கும் இலங்கையின் வெளியுறவுத் துறை செயலர் டபிள்யூ. டி.ஜெயசிங்கேவும் கையெழுத்திட்டனர்.

இதற்குப் பிறகு கேவல் சிங், டபிள்யு டி ஜெயசிங்கேவுக்கு ஒரு கடிதத்தை எழுதினார். அந்தக் கடிதத்தில் வாட்ஜ் பேங்க் பகுதி பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்.

"வாட்ஜ் பேங்கில் மீன் பிடிப்பது தொடர்பாக இரு அரசுகளுக்கும் இடையில் பின்வரும் புரிந்துணர்வு எட்டப்பட்டிருக்கிறது.

1. கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள வாட்ஜ் பேங்க், இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தைச் சேர்ந்தது. அந்தப் பகுதியின் மீதும் அதன் வளங்கள் மீதும் இந்தியாவுக்கு முழு இறையாண்மை உண்டு.

2. இலங்கையைச் சேர்ந்த மீன்பிடி படகுகளோ, மீனவர்களோ வாட்ஜ் பேங்க் பகுதியில் மீன் பிடிக்க மாட்டார்கள். ஆனால், ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக மூன்று ஆண்டுகளுக்கு இந்தியா உரிமம் வழங்கும் படகுகள் மட்டும் அங்கே மீன் பிடிக்கலாம். இந்த கால கட்டத்திற்குப் பிறகு வாட்ஜ் பேங்க் பகுதியில் இலங்கை மீன்பிடிப் படகுகள் மீன் பிடிக்கக்கூடாது.


3. இதற்காக இந்தியா விதிக்கும் கட்டணத்தையும் நிபந்தனைகளையும் இலங்கை மீன்பிடிப் படகுகள் ஏற்க வேண்டும்.

4. வாட்ஜ் பேங்க் பகுதியில் பெட்ரோலியமோ, பிற தனிமங்களோ கிடைக்கிறதா என இந்தியா ஆராய நினைத்தால், அது பற்றி இலங்கைக்குத் தெரிவிக்கப்படும். இந்தியா சொல்லும் தேதியில் இலங்கை படகுகள் வருவது நிறுத்தப்பட வேண்டும்.

5. வாட்ஜ் பேங்க் பகுதியில் இலங்கையின் படகுகள் மீன் பிடிப்பது தடுக்கப்படுவதால், புதிதாக மீன்பிடி மண்டலங்களை உருவாக்க இந்தியா இலங்கைக்கு உதவிசெய்யும்" என அந்தக் கடிதத்தில் கூறினார்.

இதனை ஏற்பதாக டபிள்யு. டி. ஜெயசிங்கே பதில் கடிதம் ஒன்றை எழுதினார். இந்த ஒப்பந்தத்தின்படியே வாட்ஜ் பேங்க் பகுதி இந்தியாவுக்குக் கிடைத்தது.

**வாட்ஜ் பேங்க் பகுதி**




**எங்கேயிருக்கிறது?**

வாட்ஜ் பேங்க் என்பது கன்னியாகுமரிக்கு தெற்கில் 50 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள கடற்பகுதி. சரியாகச் சொல்வதெனில், கன்னியாகுமரிக்குத் தெற்கில், கடலடியில் அமைந்துள்ள கண்டத்திட்டின் முனைப் பகுதி இது. இது இந்தியாவின் கடல் எல்லை பகுதிக்கு அப்பால் இருந்தாலும், அதன் மீதான உரிமையை இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளும் உறுதிசெய்துள்ளன. இந்தப் பகுதியில் கடலின் ஆழம் 200 மீட்டர் அளவுக்கு இருக்கும்.

வாட்ஜ் பேங்க் பகுதி 4,000 சதுர மைல் (சுமார் 6,500 சகிமீ) பரப்பளவுடையது. இந்தப் பகுதியில் கடல் பல்லுயிர் வளம் அதிகம் என்பதால் மீன் வளமும் அதிகம். இந்த கடற்பகுதியில் வெப்ப நிலை மிதமானதாக இருந்தாலும், உப்புத் தன்மை அதிகமாக இருக்கும். இந்தப் பகுதி மீன்கள் இனப்பெருக்கம் செய்ய உகந்த பகுதியாக கருதப்படுகிறது. மே மாதம் முதல் அக்டோபர் வரை மீன் பிடிக்க மிகச் சிறந்த காலமாகக் கருதப்படுகிறது.

இந்தப் பகுதியில் மீன் பிடிக்க கன்னியாகுமரி மாவட்டத்தின் குளச்சல், சின்ன முட்டம் துறைமுகத்திலிருந்து மீன்பிடிப் படகுகள் செல்கின்றன. கேரளாவின் விழிஞ்சம் பகுதியிலிருந்தும் படகுகள் வருகின்றன.

இந்தப் பகுதியில் சுமார் 425 வகையான மீன்கள் காணப்படுகின்றன. இந்தப் பகுதியிலிருந்து வருடத்திற்கு 65,000 மெட்ரிக் டன்கள் அளவுக்கு மீன்களைப் பிடிக்க முடியும்.

**வாட்ஜ் பேங்கில் பெட்ரோலியம் உள்ளதா?**

வாட்ஜ் பேங்க் பகுதி மீன் மற்றும் பல்லுயிர் வளத்திற்காக அறியப்பட்ட பகுதியாக இருந்தாலும் இந்தப் பகுதியில் பெட்ரோலியம் கிடைக்கும் சாத்தியமும் இருப்பதாக இந்தியா கருதுகிறது. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் ஹைட்ரோ கார்பன் இயக்குநரகம் கடந்த ஜனவரி மாதம் நோட்டீஸ் ஒன்றை வெளியிட்டது. அந்த நோட்டீஸில், வாட்ஜ் பேங்க் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள மூன்று இடங்களில் பெட்ரோலியம் கிடைக்க வாய்ப்புள்ளதா என ஆராய ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் எனக் கூறியது.

ஆனால், இதற்கு கன்னியாகுமரி மற்றும் கேரளாவைச் சேர்ந்த மீனவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் இதற்குக் கண்டனம் தெரிவித்தனர். இங்கு எண்ணெய் துரப்பணம் செய்யக்கூடாது என்று முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான எம்.ஜி. தேவசகாயம் மத்திய மீன் வளத் துறை அமைச்சகத்திற்கு கடிதம் ஒன்றையும் எழுதினார்.

ஆனால், இந்தப் பகுதியில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவைத் துரப்பணம் செய்யும் எண்ணம் இந்தியாவுக்கு நீண்ட காலமாகவே இருந்து வருகிறது.